645
75

கணபதி துணை.

# சிவநாமவிளக்கம்.

இஃது

சைவசமயபரிபாலனசபையின்

சைவப்பிரசாரகர்

ஸ்ரீ. சு. சுப்பையரவர்கள்

செய்தது.

ஷெ சபையாரால்

யாழ்ப்பாணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரிஹு புரட்டாதிமீ

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி :: சுன்னாகம்,
இலங்கை.

உ

கணபதிதுணை

# உபோற்காதம்.

அநாதிமுத்த சித்துருவாகிய சிவபெருமான் ஒருவரே பதிலக்ஷணங்களெல்லாங் குறைவற நிறைந்த பரமபதியும், அவர் ஆன்மாக்கண்மேற் கொண்ட பரமகாருண்ணியத்தினால் அருளிச்செய்த வேதசிவாகமங்களே அதிபரமாப்த வாக்கியமெனப்படும் முதனூல்களும், இவ்வேதாகமங்களால் உணர்த்தப்படும் சைவமே சற்சமய லக்ஷணங்களெல்லாங் குறைவற நிறைந்த மெய்ச்சமயமுமாம்.

இவ்வுண்மையைச் சுருதி யுத்தி அனுபூதிகளால் உள்ளபடி நிச்சயித்தறிந்த மகான்களுக்கு இதனைப் பின்னுமொருவர் அறிவித்தல் அநாவசியகமாம்.

பாவகன்மமேலீட்டினாலே வேண்டியவுணவு வேண்டியகளி வேண்டிய இன்பம் ஆகிய இவைகளைப் பெற விரும்பிய துர்ச்சனர் சிலர் வசதிக்காகக் கற்பித்த கிறிஸ்துமதப்படுகுழியில் வீழுந்தமிழ்ந்திய அஞ்ஞானப்பாவிகளுக்கு இவ்வுண்மைகளை வெளிப்படுத்துதல் தக்கதேயன்று.

புறச்சமயிகள் நம் சமயக்கடவுளாகிய சிவபிரான்மேல் ஏற்றித் தூஷிக்கும் தூஷணங்களுக்குக் கண்டனமெழுதி உண்மையை வெளிப்படுத்துதல் வேண்டாமோவெனின்.- மேற்கூறிய உணவு களி இன்பங்களை இச்சித்தோரும் சாதியாலும் ஒழுக்கத்தாலுந் தாழ்ந்து சைவநூல்களைக் குருமுகமாய் ஓதவும் திருக்கோயிலினுள்ளே பிரவேசிக்கவும் அருகரல்லாதோருமாகிக் கிறிஸ்துமதப் பிரவேசஞ்செய்தசிலர், பதிபசுபாச லக்ஷணங்களை அற்பமேனுமுணர்த்தும் நூற்பயிற்சி இன்மையால் அவ்விலக்ஷணங்களைச் சிறிதேனும் உணராதும், சைவசமய சாத்திரங்கள் இவையென்றேனும் அறியாமையால் சைவத்தின் மகிமையை அற்பமேனுமுணராதும், தாம் பிடித்த துரபிமானத்தால் ஏமாத்தப்பட்டுத் தங்கள் அறிவின் குறைவைக் காணுந்தோறும் அறிவாளர் நகைப்பார்களேயென்று நினையாது, "சிவனுந்தேவனு" என்று முகவுரையிட்டு க. வது "சிவனுக்குவழங்கியபெயர்களே அவன்தேவனல்லவென்பதை நிரூபிக்கின்றன" என்றும் உ. வது "சிவன் பிறந்திறந்தானென்று புராணங்கள் சொல்லுகிறபடியால் அவன்நித்தியகடவுளல்ல" என்றும் ங. வது "சிவனுடைய இழிவான நடக்கையும் அவன் தேவனல்லவென்பதை ரூபிக்கின்றன" என்றும் ச. வது "தான்தேவனல்லவென்று சிவனே தன்னைக்குறித்துச்சொ

குமாரஸ்வாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி :: சுன்னாகம்,
இலங்கை.

ல்லுகிறான்'' என்றும் எழுதி அச்சிட்ட துண்டுப்புத்தகமானது, சைவசமய சாத்திரப்பிரமாணங்கொண்டு ஒன்றேனும் எழுதப்படாமல், முற்காலங்களிலே சிவதூஷகராயிருந்த புறச்சமயிகள் கற்பித்த கட்டுக்கதைகளையும் விஷ்ணுபரங் கூறுகின்ற பாகவதநூல்களையும் உருவகம் தற்குறிப்பேற்றம் முதலிய அலங்கார இலக்கணங்கொண்டு சில வித்துவான்கள் பாடிய தனிச்செய்யுட்களைத் தமக்கிசையப் பொருள்பண்ணி அச்செய்யுட்களையும் பிரமாணங்களாகக்கொண்டு ஒன்றை மற்றொன்றாக விபரீதப்படுத்தி எழுதப்பட்டபடியால், அத்துண்டுப்புத்தகமும் அதுபோன்ற பிரமாணங்கொண்டு எழுதப்பட்ட பிறபுத்தகங்களும், கண்டனமெழுதவும் அவையேதுவாய்ச் சைவத்தின் உண்மை வெளிப்படுத்தவும் தகாதனவேயாம்; அவர்கள் சைவநூற்பிரமாணங்கொண்டு குதர்க்கமின்றி எழுதுவாராயின் அது கொள்ளவும் உத்தரஞ்சொல்லவும் உண்மை வெளிப்படுத்தவும் வேண்டியதாயிருக்கும்.

சைவநூலிதுவென்றுணர்ந்து அதனைப் பிரமாணமாகக்கொண்டெழுதுவதே தக்கது வேறுபிரமாணமெடுத்துக் காட்டுவது தகாது என்று இவ்வளவுதானும் உணராத அஞ்ஞானப் பாமரர்களுக்கு அறிவிக்கப் புகுதல் "காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்—கண்டானாந்தான்கண்டவாறு" என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் வாக்கின்படியே முடியும். இக்கருத்துப்பற்றியே அநேக சைவசமய அறிவாளர் அத்துண்டுப்புத்தகத்தையும் அதுபோன்ற பிறவற்றையும் பராமுகம்பண்ணிவிட்டார்கள்.

ஆயினும் இருப்புச்சங்கிலிகளையும் அறுத்து நிற்கின்றமதயானையைச் சிலந்தி நூல்வலையாற் பிடிக்க முயன்றவரைப்போலச் சிவபெருமானுடைய பதித்துவத்தை மேற்கூறியவகையான பிரமாணங்களால் அழிக்கப் புகுந்த பாமரர் தம்வெள்ளறிவைக் கண்டு தாமே நாணமடையவும், வேத சிவாகமவுணர்ச்சி இல்லாதவர்களாய்த் தங்கள் முன்னோரின் அநுசரிப்பின்வழியே சமய அநுசரிப்புடையவர்களாயிருக்கும் மந்தபுத்தியுடைய சைவர் மனந் தெளிதல் காரணமாகவும், கிறிஸ்தவர் இழிவென்று காட்டிய நாமாதிகளையேகொண்டு சிவபிரான் பதிலக்ஷணங் குறைவற நிறைந்த பதியும் கிறிஸ்துவும் யெகோவாவும் பெத்தான்மாக்களாகிய பசுக்களுமாயிருக்கும் உண்மையைக் காட்டிக் கிறிஸ்தவரின் அறியாமையை வெளிப்படுத்துதற்கும், இப்புத்தகத்தை எழுதுகின்றோம்.

இப்புத்தகத்தைச் சித்தசமாதானத்தோடு வாசிக்கின்றவர்கள் சிவபிரானுடைய பதித்துவத்தையும் யெகோவா கிறிஸ்து என்னும் இருவருடைய பசுத்துவத்தையும் கிறிஸ்தவரின் மூடத்துவத்தையும் தந்தரத்தையும் நன்றாய் உணருவார்கள்.

கணபதி துணை.

# சிவநாமவிளக்கம்.

சைவசமயிகளே!

கிறிஸ்தவர்கள் "சிவனுக்கு வழங்கிய பெயர்களே அவன் தேவனல்லவென்பதை ரூபிக்கின்றன" என்றும் "சிவனுக்கு இடப்பட்டிருக்கிற அரவணிந்தோன் அழலாடி கங்காளன் கபாலி சுடலையாடி நக்கன் நந்தி நீறணிந்தோன் பித்தன் பேயொடாடி முதலிய நாமங்கள் சிவன் இழிவான லக்ஷணங்களை உடையவர் என்று விளக்குகின்றன" என்றும் எழுதுகையால், மேற்காட்டிய அரவணிந்தோன் முதலிய நாமங்கள் சிவபிரான் எவரினும் மேலான பதிலக்ஷண முடையவரென்பது காட்டுதலை வெளிப்படுத்துவான் றொடங்கி, முதல் சிவன்என்னும் திருநாமத்தின் பொருள்களை விளக்கி, அப்பொருள்களின் உண்மையைக் கொண்டுதானே அவருடைய பதித்துவத்தைக்காட்டி அவர்பிறந்தார் இறந்தார் என்பதுமுதலாக அவர்மேற் கிறிஸ்தவர் ஏற்படுத்திய தூஷணங்கள் அவரை அடைதற்பாலனவல்லவென்பதை உணர்த்துவாம்.

நிஷ்களாதீதமாகிய பரமபதி ஆன்மாக்கண் மேற்கொண்ட பேருளால் இலய போக அதிகார காரணமாக நிஷ்களம் சகளநிஷ்களம் சகளம் என்னும் சத்திகாரிய வடிவங்களையும் குணங்களையும் செயல்களையும் கொண்டமை காரணமாக உள்ள சிவாதி நாமங்களை வேதசிவாகமங்களே கூறும். அவ்வேதாதி கலைகளினுள்ள சொற்களின் பொருள்களை விளக்குவது வேதாங்கங்களினொன்றாகிய நிருத்தம். அதின்கூறாயுள்ள நிகண்டிலே ஒருபொருளுக்குரிய பல பெயர்களை அறிவிக்கும் பகுப்பிலே சிவநாமங்கள் சிலசொல்லப்பட்டிருக்கின்றன. பெயர்க்காரணங்களாலே அப்பெயரையுடைய பொருளின் இயல்பு விளங்கக்கிடத்தலால் காரணப்பெயர்களைக்கொண்டு பொருள்களின் இயல்பு அறிதலும் ஒருவழியேயாம். ஆதலால் சிவபிரானுடைய திருநாமப்பொருள்களைக்கொண்டு அவருடையபெருமை கூறுதல்தக்கதேயாம். பெயர்ப்பொருளைக்கொண்டு சிவபிரானுக்குப் பெருமை கூறும் விஷயத்திற்கு வேதாகமம் அகச்சாக்ஷியும் புராணங்கள் அயற்சாக்ஷியும் நிகண்டு புறச்சாக்ஷியும் ஆகும். அதிலும் புறச்சமயிகளாகிய அமரசிங்கர் மண்டலபுருடன் ஆகிய இவர்கள் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலுஞ் செய்த நிகண்டுகள் விசேடித்த புறச்சாக்ஷி ஆகும் ஆகையால் புறச்சமயிகள் செய்த நிகண்டிலுள்ள பெயர்களைக்கொண்டு சிவபிரானுக்குப் பதித்துவஞ் சாதித்தல் அதிக திரமாகும்.

சிவபிரானுடையநாமங்களெல்லாம் அவரொருவர்க்கே உள்ள முற்றறிவு முதலிய சொரூபலக்ஷணங்களாகிய குணங்கள் அவரிடத்திருத்தலையே விளக்குகின்றன. அவற்றுட் சிவன் என்னுந் திருநாமத்தைக்குறித்து "சிவனெனுந்துணைச் சீரெழுத்தினை நவலுவோர்கதி நொய்தினெய்துவார்" என வேதாதிகலைகள் கூறுதற்கேதுவான அத்துணை விசேடித்த சூக்குமப்பொருள் ஒருவாறிருக்க, அந்நாமத்தின் வெளிப்படையான பொருள்களை ஒருபிரகாரம் காட்டுவாம்.

சிவ: என்னும் சம்ஸ்கிருதபதம் தமிழிலே சிவன் என்றாயிற்று.

சிவ: என்னும்பதத்தில் விளங்கியபொருள்கள் வருமாறு.

௧. வது பரமானந்தரூபியாய் நிர்விகாரியாயிருப்பவர்.

௨. வது சற்சனர்களுடைய மனந்தங்கி யிருக்கப்பட்டவர்.

௩. வது சாதுக்களுடைய மனசிலே தங்கியிருப்பவர்.

௪. சுகத்தோடுகூடியவர்.

௫. சுகங்களைக்கொடுப்பவர்.

௬. அநாதியேயுள்ள முற்றறிவு முற்றுத்தொழிலாகிய சிவத்துவம் உடையவர்.

௭. சிவத்துவம் என்னும் அதிசுத்தமுடையவர்.

௮. இறுதிக்காலத்து உலகமெல்லாந் தம்பால் ஒடுங்கிக் கிடக்கப்படுபவர்.

௯. பாசசத்தியை மெலிவித்துச் சிற்சத்தியைக் கூருவித்தலையுடையவர்.

௰. காந்தியையுடையவர்.

௧. வது பரமானந்தரூபியெனவே, தமதனுபவத்திற்கென ஒன்றும் வேண்டாமை, குறைவின்மை, வியாகுலமின்மை, ஐசுவரியம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல், அநாதிபோதம், முற்றறிவு, சுவதந்திரம், பரிபூரணம் ஆகிய இவைகளுடையராயிருத்தல் விளங்கிற்று. இவைகளில் வியாகுலமின்மையால் துன்பம் நோய் இல்லாதவர் எனப் பொருள்படும் நிராமயன் என்னும் நாமமும், ஐசுவரியமுடைமையால் ஞானச்செல்வத்தோடு கூடியவர் எனப்பொருள்படும் ஈசன் ஈசானன் என்னும் நாமங்களும், ஆனந்தத்திற்குரிய ஐசுவரியம் வீரம் புகழ் திரு ஞானம் விராகம் இவைகளையுடைமையால் பகவான் என்னும் நாமமும், இதில் வீரமுடைமையால் வீரத்தன்மையுடையவர் எனப்பொருள்படும் உக்கிரன்என்னு நாமமும், மூன்றுலோகமும் பயப்படுந்தன்மையுடையரெனப் பொருள்படும் பீமன் என்னும் நாமம்முதலிய நாமங்களும் உடையராயினர்.

நிர்விகாரியெனவே, விருப்பு வெறுப்பில்லாமையும், அசலராயிருத்தலும், ஆதியந்தமில்லாமையும், தமதபின்னசத்திவாயிலாகச் சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்யாது செய்பவர் என்பதும், விளங்கின.

உ- வது சற்சனருடைய மனந்தங்கியிருக்கப்பட்டவர் எனவே, வணக்கத்துக்குரிய சிரேட்டத்தையுடையர் என்பதும், சற்சனரால் தியானிக்கப்படுந் தகுதியுடையர் என்பதும், சற்சனரிடத்தே பிறர் செய்யும் வழிபாடுகளையெல்லாம் அவரவர் வாயிலாக ஏற்றுப் பயனளிக்கும் முதன்மையையுடையர் என்பதும் பெறப்பட்டன. வணக்கத்துக்குரிய சிரேட்டராதலாலே சிரேட்டராகிய கடவுள் எனப்பொருள்படும் ஈசுரன் என்னும் நாமமும், மேலான ஈசுரர்களுக்கெல்லாந் தலைவன் எனப்பொருள்படும் பரமேசுரன் என்னும் நாமமும், மகத்தாகிய ஈசுரர்களுக்கெல்லாந் தலைவன் எனப்பொருள்படும் மகேசுரன் என்னும் நாமமும், ஆன்மாக்களுக்கு மேலானவர் எனப் பொருள்படும் தற்பரன் என்னும் நாமமும் உடையராயினர்.

ங- வது சாதுக்களுடைய இருதயத்திலே இருப்பவர் எனவே அடியார்க்கெளியரென்பதும், ஆன்மாக்களுடைய தியானாதிகளில் அவரவர் நினைவின் வடிவாயமையும் சத்திகாரிய வுருவுடையர் என்பதும் விளங்கின.

சு- வது சுகத்தோடு கூடியவர் எனவே தாம் ஒருவராற் சுகம் அடைய வேண்டாதவர் என்பதும், பரமானந்த ரூபியாயிருத்தலால் வரும் இயல்புகளும் உடையர் என்பதும் விளங்கின.

ரு- வது சுகங்களைக் கொடுப்பவர் எனவே பேரருளுடையர் என்பதும், ஆன்மாக்கள்பொருட்டே சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களையும் செய்வாரென்பதும், அவருடையசெயல்களெல்லாம் ஆன்மாக்களுடைய சுகத்தைக்குறித்தன என்பதும், பெறப்பட்டன. இதனாற்றானே போகியாயிருந்துயிர்க்குப் போகத்தைக் கொடுத்தல்பற்றி வாமபாகம் தேவி விளங்கப்படுபவர் எனப் பொருள்படும் வாமதேவன் என்னும் நாமமும், ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவர் எனப் பொருள்படும் சங்கரன் என்னும் நாமமும், பரமானந்த ரூபியாயிருப்பவர் சுகத்தை உண்டாக்குபவர் எனப்பொருள்படும் சம்பு என்னும் நாமமும் உடையராயினர்.

ஆன்மாக்களுக்கு நரகத்துன்பங்களையும் பிறவித் துன்பங்களையுங் கொடுத்து வருத்துதல் சுகஞ்செய்தலாமோஎனில், ஒருமருத்துவன் நோயாளனுக்கு நோய்க்குத் தக்கபடி இனிய மருந்துகளையேயன்றிக் கைப்பான மருந்துகளைக் கொடுத்தலும் அறுத்தல் சுடுதல் முதலிய சிகிச்சைகளைச் செய்தலும் நோயை மாற்றிச் சுகஞ்செய்தற் கேதுவாதல்போல,

நரகயாதனைமுதலிய துன்பங்களைக் கொடுத்துப் பாவத்தை நீக்குதல் முத்தியின்பத்திற் கேதுவாதலால் சுகஞ் செய்தலேயாம்.

௬-வது அநாதியேயுள்ள முற்றறிவு முற்றுத்தொழிலாகிய சிவத்துவம் உடையர் எனவே, எல்லாப்பொருள்களையும் புலப்படக்காணும் எல்லாவறிவுமுடையர் என்பதும், அவராலறியப்படாததொன்றில்லையென்பதும், எக்காலத்தும் எவ்விடத்தும் இளைப்பின்றி எத்தொழிலுஞ் செய்யவல்ல குறைவிலாற்றலும் வரம்பிலாற்றலும் உடையர் என்பதும், அவராலியலாத கருமமொன்றில்லையென்பதும் விளங்கின. முற்றறிவுடைமையால் ஞானமேவடிவமாக உடையர் எனப்பொருள்படும் ஞானமூர்த்தி என்னுநாமமும், ஞானமுண்மைக்குப் பிரமாணம் வேதாகமங்களை அருளிச்செய்தலேயாகையால் மறைமுதலி என்னும் நாமமும் உடையராயினர்.

௭-வது சிவத்துவம் என்னும் அதிசுத்தமுடையரெனவே, பரிசுத்தமுடையர் என்பது விளங்கிற்று. இதனால் மலமில்லாதவர் எனப்பொருள்படும் நிருமலர் என்னும் நாமமு முடையராயினர்.

௮-வது இறுதிக்காலத் துலகமெல்லாந் தம்பாலொடுங்கிக் கிடக்கப்படுபவர் எனவே, உலகத்துக்குக் காரணர் என்பதும் ஆதியந்தமில்லாதவர் என்பதும் விளங்கின. இதனால் எல்லாமுண்டாதற் கிடமானவர் எனப்பொருள்படும் பவனென்னுநாமமும், மூன்றுலோகத்திற்கும் தாயெனப்பொருள்படும். திரியம்பகனென்னும் நாமமும் எக்காலத்தும் நிலைத்திருக்கிறவர்எனப் பொருள்படும் தாணுஎன்னும் நாமமும் முன்னோன் என்னும்நாமமும் உடையராயினர்.

௯-வது பாசசத்தியை மெலிவித்துச் சிற்சத்தியைக் கூருவித்தலையுடையவர் எனவே, பாசசத்தியை மெலிவித்துச் சிற்சத்தியைக் கூருவிக்குந் தொழிலுடையவரென்பதும், அதனால் ஆன்மாக்களுக்கு மலபரிபாகம் வருவிப்பவரென்பதும், அது வந்துழிக் குருவதிட்டான மின்றியாவது குருவதிட்டானத்தைக் கொண்டாவது ஆன்மாக்களுடைய பாசத்தை விமோசனஞ்செய்து முத்திகொடுப்பவரென்பதும், பெறப்பட்டன. ஆன்மாக்களுக்கு முத்தியாகிய பரமானந்தத்தைக் கொடுத்தற்குப் பாசவிமோசனஞ் செய்தல்பற்றி அன்பர்களுடைய பாசத்தை அரிப்பவரெனப் பொருள்படும் அரனென்னும் நாமமும், அதுபற்றி யோகம் பயிற்றுதலினால் யோகியென்னும் நாமமும், ஆன்மாக்களைத் துக்கசாகரத்தினின்றும் எடுப்பவரெனப் பொருள்படும் உருத்திரனென்னும் நாமமும், பசுக்களைச் சம்சாரபந்தத்தினின்றும் இரக்ஷிப்பவரெனப் பொருள்படும் பசுபதியென்னும் நாமமும், உடையராயினர்.

௧0- வது காந்தியையுடையரெனவே, சத்திகாரியவுருவமாகும் விசுத்ததேசமுடையவரென்பது விளங்கிற்று. இதனாற் சோதியென்னும் நாமம் உடையராயினர்.

மேற்காட்டிய பெயர்களுட் சில பிரமாமுதலிய மற்றையோருக்கும் இருக்கின்றனவேயென்னில், அவை அவர்களுக்குத் துதிவாதமாகச் சொல்லப்பட்டன. அது தக்கனுக்குப் பிரமதேவர் வேதத்தின்றுணிபுகள் இவையென்று சொல்லிய

"என்னலுங்கமலத்தண்ணலியாவருந்தெளிதரேற்று
வுன்னரும்பெற்றியீதென் றுணர்தரக்கேட்டியன்றன்
சொன்னதோர்மறைகடம்மிற்றுணிபுகேளிறதியில்லா
முன்னவற்காதலுண்மையொழிந்தனமுகமனுமால்." எ—ம்.

"ஆதலாலீசனல்லாவனைவர்க்குமுயிர்க்குமைந்தாம்
பூதமானவைக்குமேற்றம்புகலுதன்முகமனாகும்." எ—ம்.

வரும் கந்தபுராணச் செய்யுட்களாற்றுணியப்படும். அன்றியும் அந்நாமங்கள் அவ்வாறான அற்ப காரணங்களால் அவர்க்கிட்டு வழங்கிய காரணப்பெயர்களாயும், சிவபெருமானுக்கு அவை காரணவிடுகுறியாயும் வழங்குதலால் சிவபிரானுக்கே அவை உரியவாயின.

இனி அரவணிந்தோன் முதலிய நாமங்கள் சிவபிரானுடைய பதித்துவத்தை விளக்குதல் வருமாறு: மனோவாகதீதமாகிய நிட்களசிவம் பஞ்சகிருத்திய காரணமாகச் சகளநிட்களம் சகளம் என்னும் வடிவங்களைக் கொள்ளும்பொழுதும் அன்பர்களுடைய தியானத்தில் அமையும் பொழுதும் அவருடைய சத்தியாகிய திருவருட்குணங்கள் அவ்வடிவங்கட்கு அங்கம் பிரத்தியங்கம் சாங்கம் உபாங்கங்களாக வெளிப்படுமென வேதாகமங்கள் விரித்துக் கூறும். அது "குணஞ்சின்னமிதிஞ்ஞேயம் தத்குணந்தசதாபவேத்" (குணமே அடையாளமாக வெளிப்படும்; அவை பத்துக் குணங்களாகத் தோன்றும்.) என வாதுளாகமத்திற் கூறிய வசனத்தானும் அறியப்படும். இன்னும்

"உருவருள்குணங்களோடுமுணர்வருளுருவிற்றோன்றுங்
கருமமுமருளரன்றன்கரசரணாதிசாங்கம்
தருமருளுபாங்கமெல்லாந்தானருடனக்கொன்றின்றி
யருளுருவுயிருக்கென்றேயாக்கினனசிந்தனன்மற."

எனத் திராவிட சைவசித்தாந்த நூலானும் உணர்த்தப்படும். அவருடைய சில சகளத்திருமேனி போகவடிவமும் சில கோரவடிவமும் சில யோகவடிவமுமாகையால், அவ்வத்திருமேனிகட்கியைந்த குணங்

கள் அவ்வவற்றிற்கியைந்த அடையாளங்களாக வெளிப்படுமென்றுங் கொள்ளப்படும். இவைகளைக் கந்தபுராணம் "ஞானந்தானுருவாகியநாயகன்" எ-ம். "உருவிலைமக்கெனவொன்றுநம்வயினருளுருவவையெலாம்" எ-ம். "உருவுஞ்செய்கையுமோங்கியபெருமுன்-னருளினாற்கொண்டு" எ-ம். "நிலவுகின்றதன்னருளுருக்கொண்டிடுநிமலன்" எ-ம். "காமருவடிவாயெங்குங்காண்பனசத்தியங்கண்-மாமயனாகிநின்றான்மன்னியசிவனாம்" எ-ம். "அருளுருவாகியேயகிலமால்க-டருவதுங் கொள்வதுமாகித்தாணுவாய்" எ-ம். இவைபோல்வன பிறவுமாகக் கூறுதலால் சிவபெருமானுடைய வடிவம் அருள்வடிவமாதல் அமையும். அவருடைய வடிவமுங் குணமுஞ் செயலும் சத்திகாரியமாய் அருளாயிருத்தல் கந்தபுராணம் தவங்காண் படலத்தில்

"வேண்டுதல்வேண்டிடாமையில்லதோர்விமலன்றன்னை
யீண்டுநீயிகழ்ந்தவெல்லாம்யாரையுமளிக்குமன்பு
பூண்டிடுகுறிகாண்"

"போதனேமுதலாவுள்ளபுங்கவர்வழிபட்டேத்த
வேதமிலிறைமையாற்றலியாவையும்புரிந்தநாதன்
காதலும்வெறுப்புமின்றிக்கருணைசெய்நிலைமையேகாண்
பேதைநீயிகழ்ச்சியேபோற்பேசியதன்மையெல்லாம்."

என உமாதேவியார் கூறிய திருவாக்காலுணரப்படும். இவைகளைக் குறிப்பாக வெளிப்படுத்தி நவரசங்களுந் தோன்ற உருவகமாக்கிக் கூறிய புராணங்களாலும் இவ்வுண்மை வெளிப்படும். அது பிறவித்துன்பத்தையுணர்ந்து முத்தியின்பத்தை விரும்பித் தவத்தையும் யாகாதிகருமங்களையும் வேதவிதிப்படி செய்கின்றவராயிருந்தும் அம்முத்தியின்பத்தையும் கருமபலனையும் தமக்குக் கொடுப்பவர் தம்மின் வேறாய் ஒருவர் உளர் என உணராது ஒழுகிய தாருகாவனத்து முனிவர்மேல் சர்வசீவதயாபரரான சிவபிரான் இரக்கங்கொண்டு அவர்கள் மயக்கத்தைத் தீர்த்தருளும்படி அங்கே பிக்ஷாடனராய் எழுந்தருள, அம்முனிவர்கள் வேதமொன்றுமே நித்தியம் சிவன்முதலிய எல்லாரும் அநித்தியர் எனவும் வேதத்திற் கூறும் சிவன்முதலிய சத்தங்களே பிரமம் எனவும் அச்சத்தங்கள் தம்மின் வேறாகிய தேவர்களை அறிவிப்பன அல்ல எனவும் கர்மகர்த்தாவாகிய ஆன்மாச்செய்யும் யாகாதிகருமங்களே இம்மை மறுமைப் பலனைத் தரும் எனவும் கூறும் மீமாம்ஸ மயக்கமுடையவராகையால் சிவனைக் கொல்லுவோமென நினைந்து ஒரு அபிசார ஓமத்தைச்செய்ய, அப்பொழுது சிவபிரான் சுவதந்திரராகிய தம்மை முன்னிடாது செய்யும் வேள்விமுதலிய செயல் பயன்படாமையை அவர்களுக்குக் காட்டுதல்வாயிலாகத் தாம் பஞ்சகிருத்தியகர்த்தாவாயிருத்தலையும், தமதபின்

ஞசத்தியினிடத்தே நின்று தமக்கு வடிவமுங் குணமுஞ் செயல்களும் தோன்றி, தோன்றிய முறையே தம்மிடத்தொடுங்குதலையும், அக்கிருத்தியம் ஆன்மாக்களுடைய ஆணவமலசத்தியைக்கெடுத்து அவைகளுக்கு முத்தியின்பத்தைக் கொடுத்தற்காயிருத்தலையும் வெளிப்படுத்தும்பொருட்டு, அவ்வோமகுண்டத் தக்கினியினின்றுந் தோன்றிவந்த மாயை முதலியவற்றின் வடிவாகிய நாகமுதலியவற்றையும் மந்திரங்களையும் அவ்வக்கினியையும் தாமே ஆபரணாதிகளாகத் தரித்துக்கொண்டு, ஆணவமலசொருபமாய் அக்கினிகுண்டத்தினின்றுந் தோன்றிவந்த முயலகனைத் தாம் ஆன்மாக்களுடைய ஆணவமலசத்தியைக் கீழ்ப்படுத்தி முத்தியின்பங் கொடுத்தல் வெளிப்படத் திருவடியின்கீழ்ப்படுத்தி ஊன்றிக்கொண்டு ஆனந்தநடனஞ் செய்கின்றமையைக்காட்டி மெய்ஞ்ஞானத்தை உதிப்பித்த திருவருட்செயலும் பிறவுமாம். இதனால் சிவபிரானுடைய அங்கம் முதலியவை திருவருட்குணமாதல் வெளிப்பட்டன.

அரவணிந்தோன் என்ற நாமம் * குண்டலினிசத்தி பாம்புவடிவமாயிருக்கின்றதாக உருவகப்படுத்துகிறபடியாலும் அது சிவபிரானுக்குப் பரிக்கிரகசத்தியாதலுண்மையாலும் அதனுடைய விரிவு சுருக்கங்களே பிரபஞ்சத்தோற்ற ஒடுக்கங்களாகையாலும் அதனையுடையராயிருத்தலே அரவணிதலாதலால் அவர் செகத்திற்கு நிமித்த காரணராயிருத்தலையும், "இருத்திஸ்யாத்நாகரூபந்து" (இருத்தி நாகரூபமாகக் காணப்படும்) என்னும் வாதுளாகமவசனப்படி இருத்தியென்னும் பதத்திற்கு நல்லசெல்வம் ஐசுவரியம் அதிகப்படுதல் நிறைவு மேலானதன்மை என்பன பொருளாதலால் இவைகளையுடையர் என்பது போதருமாற்றால் அவர்எல்லாந் தம்முடையனவாக விருத்தலையும், அவருடைய நிறைவுடைமையையும், மேலாந்தன்மையுடைமையையும், அருளுடைமையையும் வெளிப்படுத்துகின்றன. அரவணிதல் இவ்வாறாயிருத்தல்போல, அவர்க்கு முக்குணங்களும் சூலமாகவும், வலிமை மழுவாகவும், அடக்கியாளுதலால் வந்த புகழ் வாட்படையாகவும், ஒருவராற் கெடுக்கப்படாமை வச்சிரமாகவும், அருள் அபயமாகவும் சொல்லப்படுகின்றன. மற்றையவைகளும் இவ்வாறாதல் சொல்லப்புகின் விரியுமாதலின் விடுகின்றோம். கங்காளன் கபாலி நீறணிந்தோன் என்னும் நாமங்கள் அவர்

---

* "யாதுபா தானத்தென்று மிறைவன்றானிலயமாகி—பேதமுண்டாயாரும்பேசுதற் குரியனாஞ—ஞதுமா மாயைமாயை குண்டலியமல விந்து—நீதில்வா கீசை வித்தை சிவமிவைபரியாயப்பேர்." என்பதனாற் குண்டலினிசத்தி இன்னதென்பது அறிக.

மேற்கூறிய சகளத்திருமேனியிலே இவைகள் அணிந்திருக்கிறதாகத் தோன்றவெளிப்படலால் யாவர்க்கும் முதல்வர் என்பதும், ஆன்மாக்களிடத்தே அருளுடையர் என்பதும், விளங்கின. பரதந்திரமுடையவர் தண்டனைபெறுதற்கும், சுவதந்திரமுடையவர் தண்டித்தற்கும் தக்கவராதலால், தருக்கடைந்த ஒவ்வோர் காலத்தும் பிரமவிட்டுணு முதலியோர் தண்டனையைப் பெற்றார். சிவபிரான் தாமாகவும் வீரபத்திரர் முதலியோரை அதிட்டித்து நின்றும் அவர்களைத் தண்டித்தார். அது நிக்கிரகவழியாயனுக்கிரகித்தலேயாம்.

அவ்வாறு தண்டித்துக் கவர்ந்த கபாலம் தோல் கொம்பு எலும்பு சங்காளம் நீறு முதலியவற்றை, தம்மைப்பரம்பொருளெனப் பலரும் அறிந்து வழிபட்டு ஈடேறுதல் காரணமாகவும், படைத்தன் முதலிய அதிகாரம்பெறும் பிரமாமுதலியோர் தம்மைமறந்து அகங்காரங்கொண்டு கெடாமல் தரிசிக்குந்தோறும் நினைவுகூருதல் காரணமாகவும், அவர்கள் செய்திருந்த புண்ணியங் காரணமாகவும், தாம் அணிந்துகொண்டவராகக் காணப்படுவார். * இது கந்தபுராணம் "ஆதலாற்றமை வியப்பதற் கன்றவை யணித—லீதலாதொரு திறமுள தியாவருமெவர்க்கு—நாதனேயிவ னென்றுதன் பாங்கரே நண்ணித்—தீதெலாமொரீஇ முத்திபெற் றுய்ந்திடுஞ்செயலே" எ-ம். "என்புநீறோடு கழியுடல் சிகைமுடி யெனைத்து- முன்பணிந்திடு மியல்பினை முழுதுயிர்த்தொகைக்கு- மன்புசெய்திடு செயலிது வாமெனவறிநீ" எ-ம்- "அன்னோர்க்—கதிகனென்றெவருந்தேற வாங்கவர்துஞ்சவெந்த—பொதிதருபலியு மென்பும் புனைபவன்றானுமென்னும்" எ-ம். தொல்லை நாளினீறுக்கியு மணிந்திடுந் தூயோன்-மல்லன் மாதவ மனையவ ராற்றிய மரபால்" எ-ம். கூறுதலாலமையும்.

"பிரமவிட்டுணுக்களுக்குந் தண்டனைபுரியும் வீரமுடையராயின், அருச்சுனன் கையால் வில்லடிபட்டும், வேடன்காலால் உதைபட்டும், பிரம்படிபட்டும், முனிவர்பெண்களைக் கற்பழித்துச் சாபம்ஏற்றும், வாணாசுரனுக்குச் சிறையாக வாயில்காத்தும், பத்மாசுரனுக்குப் பயந்தொளித்தும், சனியன்பிடிக்க விறகுவெட்டிப் பிழைத்தும், சுவதந்திரமில்லா

---

* அரவணிதன்முதலியன சிவபிரானுடைய உயர்வைக் குறித்தலால் அந்நாமங்களை அவர் பெயராக வேதசிவாகமாதிகள் சொல்லும். அவைகளைச் சைவர் வழங்குவர். கிறிஸ்து முண்முடிதரித்தன் முதலியன அவரிழிவைக் குறித்தலால் அவருக்கு முண்முடிதரித்தோன் எனக் கிறிஸ்தவர் அப்பெயரிட்டு வழங்கார். இதனால் முண்முடிதரித்தலோ அரவணிதலோ விசேடமெனக் கிறிஸ்தவரே ஆராய்வாராக.

தவராயினார்'' என்க்கிறிஸ்தவர் எழுதியிருக்கிறார்களென்றால், அவைகள் அவருடைய மெய்யடியார் செய்தனவெல்லாம் அவர்க்கு உவப்பாதலையும், அவருடைய வியாபகத்தையும், அருளுடைமையையும், அவர் அடியார்க் கெளியராதலையும் வெளிப்படுத்தும்.

பஞ்சபாண்டவருள் ஒருவராகிய அருச்சுனர் சிவபெருமானைபரமபதியென்றுணர்ந்து பாசுபதாஸ்திரம் பெறவேண்டி அவரை நினைந்து அருந்தவஞ்செய்ய, வேண்டுவார் வேண்டியன ஈந்தருளும் கருணாநிதியாகிய சிவபிரான் ஒருவேடுவராகத் தோன்றி, அவ்வருச்சுனருக்கு யாவர்க்குமரிய யுத்தம் பயிற்றுதல் காரணமாக விற்போர் செய்து வில்லடிபட்டு அவரைத் தீண்டி மற்போர்செய்து பின்னர்த் தம்முடைய வடிவத்தைக் காட்டிப் பாசுபதாஸ்திரம் கொடுத்தமையும், அவ்வருச்சுனர் எக்காலமும் சிவபூசை செய்துவந்தமையும், யுத்தமுனையிலே யுத்தத்தாலும், புத்திரசோகத்தாலும், களைத்தபொழுதும் சிவார்ச்சனை செய்த[illegible]னன்றித் தாகசாந்தி பண்ணத்தானும் உடன்படாதிருந்த அவ்வளவு பூசைநியமமும் பாரதசரித்திரத்தாலும், தவஞ் செய்தபொழுது சிவபெருமான் தம்முடைய வடிவத்தைக் காட்ட, அவர் பாசுபதாஸ்திரம் பெறுங்கருத்தை விட்டு வணங்கி முத்தி தந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் ''நீ பகைவரை வெல்லக்கருதிப் பாசுபதாஸ்திரம் பெறநினைந்து தவஞ்செய்தாய் அதனால் அதை இப்பொழுது தருவோம்'' என்று கொடுத்தருளி, அவருடைய அன்பின் பெருக்கத்தை உலகத்தாருக்குக் காட்டும்படி ''நீவேடனாகப்பிறந்து தக்ஷிணகைலாசமாகிய திருக்காளத்தியிலே நம்மை வழிபட்டு முத்தி யடைவாயென்றருளிச்செய்தமை திருக்காளத்திபுராணத்தாலும், பின்னர் அவர் வேடராகப் பிறந்து திருக்காளத்திமலையிலே சிவபிரானை வழிபடப்போனபோது ஒரு கையிலே வில்லும் அம்பும் மற்றைக் கையிலே நைவேத்தியமும் இருந்ததனால் திருமுடியிலிருந்த நிருமாலியத்தைக் காற்செருப்பால் அகற்றினமையும், அவருடைய அன்பை உலகத்தாருக்குக் காட்டச் சிவபிரான் தமது கண்ணினின்றிரத்தஞ் சொரிவதாகக் காட்டியருள அவர் தம்முடைய கண்ணை அம்பினாலேதோண்டி அப்பினமையும், பின்னர் மற்றைக்கண்ணிலும் இரத்தஞ்சொரிதல் கண்டு அது காரணமாகத் தம்முடைய மற்றைக்கண்ணையுந் தோண்டினமையும், இவ்வாறுசெய்தற்கேதுவாக அவரிடத்தே இருந்த அன்பின் பெருக்கமும் பெரியபுராணத்தாலும் அறியப்படும். ஆதலால் சிறுகுழந்தைகள் செய்தனவெல்லாந் தந்தைதாயர்க்கு உவப்பாமாறுபோல, அருச்சுனர் அடித்த வில்லடியும் அவருடைய அவதாரமாகிய கண்ணப்பநாயனாராகிய வேடருடைய செருப்பணிந்த அடியும் சிவபிரானுக்கு உவப்பாயின. இதனால்

“உதைபட்டார்” என்றது மறுக்கப்பட்டது. அது கண்ணப்ப நாயனாருடைய பூசையின் பெருமையை யறியாத சிவகோசரியாருக்குச் சிவபெருமானே “செருப்படிநம்மிளம்பருவச் சேயடியின் விருப்புடைத்தால்” எனக்கூறிய அருமைத்திருவாக்காலும் உணரப்படும். இதனால் தமது மெய்யன்பர் செய்தனவெல்லாம் அவருக் குவப்பாதல் விளங்கிற்று.

## பிரம்படிபட்டார் எனல்.

செம்மனச்செல்வி என்னும் வந்தியார் தம்மிடத்தே அன்புடையராய் நாடோறும் சமைத்துவிற்கும் பிட்டைத் தமக்கு நிவேதித்து வந்தஉண்மையும், தாம் அடியார்க்கெளியராயும் சர்வவியாபகராயும் இருக்கும் உண்மையும் வெளிப்படுதல் காரணமாக, வந்தியாருக்குக் கூலியாளாக வந்து திருமுடியிலே மண்சுமந்து பிரம்படிபட்டு [illegible]ன வந்தியாரைக் கணநாதர் சூழச் சிவலோகஞ் சேர்த்தருளினார். இதனால் மேற்கூறிய அடியார்க்கெளியராதலும், சர்வவியாபகமுடையராதலும் வெளிப்பட்டன. * “இல்லாத வன்பினர்க்கே யீசன் மிகவரியன், றொல்லாழிவையகத்திற் றோன்றானே—நல்லார்தங், கல்லுஞ் சிலையுமொரு கைப்பிரம்பும் பட்டமையா, லெல்லார்க்கு மீசனெளியன்.” எனச்சிவஞானப் பிரகாசங் கூறுமாற்றானு முணர்க.

## பெண்கள்கற்பைக்கெடுத்தார் எனல்.

ஆன்மாக்களாகிய நாமெல்லாம் பரதந்திரர் சிவபெருமான் ஒருவரே சுவதந்திரர் ஆகையால் அவருடைய திருவருளைமுன்னிட்டு அவருடைய திருவருள் வசத்தினிற்பினன்றி நம்முடைய விரதநியமாதிகள் பயன்றரா எனஉணராது மீமாஞ்சைமயக்கினால் தம்மைச் சுவதந்திரராக எண்ணிய தாருகாவனத்து முனிவர்கள் தங்கள் மனைவியர்கட்கும் அம்மார்க்கத்தையே போதித்து அவர்களைக் கற்பின்வழிசிறந்த அவர்களும் கற்புடைமையே தங்களுக்குப் போதிய ஒழுக்கமும் தெய்வமும் எனக் கருதித் தங்களைச் சுதந்திரராக எண்ணிச் சிவபிரானிடத் தன்புசெய்தலை ஒழிந்திருக்க, கருணாநிதியாகிய சிவபெருமான் தம்முடைய திருவருளை

---

* வில்லடிபிரம்படிகளைப் புராணங்களிலே நடவிக்கண்டகிறிஸ்தவர் அந்தஅடிகள் எல்லாருக்கும் பட்டுறைத்த தென்றதையுங் கண்டிருப்பார். கிறிஸ்துநாதர் மனுடருக்காகவே சிலுவையிலறையுண்டு வருத்தப்பட்டும் அந்தவருத்தம்யாவருக்கேனுமிருந்ததாக பைபில் சொல்லாதிருத்தலையுங் கண்டிருப்பார். இதனால்சர்வவியாபகர்யாவரென்று அவரே ஆராய்வாராக.

முன்னிடாதுசெய்யும் விரதநியமங்கள் பலன்தரமாட்டா என்பதைப் பலருக்குங் காட்டுதற்காக மேற்கூறியபிரகாரம் தாம் பிக்ஷாடனராயும் விஷ்ணுமோகினியாயும் அங்கே யெழுந்தருள, முனிவர்கண் மோகினியைக்கண்டு காமத்தான்மயங்கி விரதநியமங்களை இழந்தார்கள். பெண்களும் பிக்ஷாடனமூர்த்தியைக்கண்டு தாமே இச்சித்து மயங்கிக் கற்பினின்றுந் தவறினர்கள். இதனால் முனிவர்களும் மனைவியர்களும் தாம் முன்னே கொண்டிருந்த மயக்க உணர்வு நீங்கிச் சிவபெருமான் ஒருவரே சுவதந்திரர் எனவும் தாம் பரதந்திரர் எனவும் சிவபெருமானுடைய திருவருள்வசத்தி னிற்பினன்றி நம்முடைய செயல்கள் பயன்றரா எனவும் உணர்ந்து, உண்மைஞானம் பெற்று அந்நெறியொழுகி வீடுபெற்றார்கள். இதனாற் சிவபிரானை முன்னிடாது செய்யும் விரதநியமங்கள் சித்திபெறாமையும் அவருடைய அருளுடைமையுந் தோன்றுகின்றன. அது. "முன்பு தாருகவனத்தின் முனிவரர் யாருமீசற்—கன்பிலராகி வேள்வி யளப்பிலபுரிந்து தாமே—யின்புறு முத்தி தன்னை யெய்துவா னெண்ணியங்கட்—துன்புற வாளாநோற்றுத் துணிவினு லொழுகலுற்றார்." எனக் கந்தபுராணத்திற் கூறியபடி முத்தியை விரும்பி வேதவிதி ஒழுகியுழன்றும், பயனடையும் நெறியையறியாமல் தடுமாறி மயக்கவழி ஒழுகிய முனிவர்களுக்கும் மனைவியர்களுக்கும் உண்மைவழியைக் காட்டிய இரக்கமேயாம்.

இதுவன்றி அவர் காமமயக்க முடையவரல்லர் என்பது, அவர்க்குக் காமாரியென்னும் பெயருண்மை யாலும், பகவான் என்னும் பெயருண்மையால் விராகமுடையர் என்பது தோன்றலாலும், இச்சரிதங்கூறிய புராணங்களிலே "நெடியோன் மகனைப் பொடியாக்கு மறவன்றானோர் காபாலியாகிப் பலிக்குவருகின்றான்" எனவும் இவைபோல்வன பிறவாற்றாலும் விதந்து கூறுதலாலும், வெளிப்படும்.

முனிவரிட்டசாபம் சிவபிரானை அடையாமையும் அவர்கள் வணங்கி வழிபட்டதும் இச்சரிதங்கூறிய புராணங்களிலே "சங்கையின் முனிவர்யாருஞ் சாற்றியசாபம்யாவு—மெங்கடம்பெருமான் முன்னுமெய்தியதில்லை" எனவும் "பொறுத்தியெம் பிழையை யென்றே போற்றிசெய்முனிவர்தங்க—டறத்தினைநோக்கி நந்தஞ் செந்நெறியொழுகித்திய—மறத்தினையகற்றிமேலை மாதவம்புரிதிரென்று—நிறுத்தினனடையாதார்க்கு நீடருள்புரியுநித்தன்" எனவுங் கூறியவாற்றானுங் கொள்ளப்படும். *

---

* சிவன் "பெண்ணாணு டாணலியுமல்லாப் பெற்றியன்" என்றிருக்க, இலிங்கமறுந்து விழுந்ததென்று ஒன்றை மற்றொன்றாக முற்காலத் திருந்த சிவதூஷகர் கூறிய வாக்கைநம்பிக் கிறிஸ்தவரும்பல முறைவாய்திறந்ததே யன்றிப் பிறிதில்லை.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னுகம்,
இலங்கை.

வாணாசுரனுக்குச் சிறையாயிருந்து வாயில்காத்தார் எனல்.

வாணாசுரன் மெய்யன்பனாய் நாடோறும் ஆயிரம் சிவலிங்கத்திலே சிவபிரானைப் பூசித்ததும் அப்பூசாபலத்தினாற் பின் கணநாதனாய் அவருக்குக் குடமுழாச்சேவிக்குந் தொண்டனாயிருத்தலும் அவன் பூசித்தலிங்கங்கள் நருமதையாறுமுதலிய ஆறுகளிலே எடுக்கப்படுதலும், அது பூசைக்கு விசேடமாதலும், உபதேசகாண்ட முதலியவற்றிலும் பிரத்தியக்ஷத்திலுங் காணப்படும். ஆதலால் சிறையாயிருந்து வாயில்காத்தார் என்று புராணங்களிற் சொல்லப்படாதிருக்கக் கற்பித்துச்சொல்லினும் அது "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்" என்று தம்மைச்சொல்லியருளிய சிவபிரானுக்குப் பெரியதோர் புகழேயன்றி இகழ்ச்சியாகாதென்க இதனால் அவருடைய அருளின் பெருமையே விளங்குகின்றது.

பத்மாசுரனுக்குப் பயந்தொளித்தார் எனல்.

பத்மாசுரன் சிவபிரானை வழிபட்டுத் தவஞ்செய்து தன்கையை யாவருடைய சிரசில் வைப்பினும் வைக்கப்பட்டவர்கள் எரிந்து போம்படி வரம்பெற்றானாம். அவன் முதன்முறை சிவபிரானுடைய தலையிலே தன்கையை வைக்க முயல அவர் ஐவிரலிக் காய்க்குள் ஒளித்துக் கொண்டாராம். அப்பொழுது விட்டுணு மோகினியாய் வெளிப்பட்டு அவனை மயக்கி அவன்தானே தன்கையைத் தன் தலையிலே வைத்துக் கொள்ளும்படி செய்ய, அதனால் அவன் எரிந்தானாம். இது சிவபுராணங்களிலே சொல்லப்பட்டதாயினுமாகுக சொல்லப்படாததாயினுமாகுக, இதனுண்மைப் பொருளை ஆராயின் சிவபரமே சாதிக்கின்றது. அது சிவபிரானுடைய வாக்கின் சத்தியே அவனை எரித்தது. அதற்கேதுவாக அவனைத் தலையிலே கைவைப்பித்த பிரேரகசத்தி விட்டுணுவை மோகினியாக்கிற்று. இதனாற் சிவபிரான் அங்கங்கே நின்று அவரவர் செய்யும் வினைப்பயனை அறிந்து அவ்வவர்க்கூட்டுந் திறமையும். "அவனுக்கஞ்சா வலத்தின ரில்லையுண்டேன் மாய்வரே" எனத் ததீசி முனிவர் அருளிச்செய்தமையும் "பெற்றிடுங்குரவரானோர் பிள்ளைகடம்பாலேதொன்—றற்றிடிற்பிறரைக்கொண்டு முறைதுயர் செய்து தீர்ப்பர்—மற்றவர்தம்பாலன்போ வன்கணோ வதுபோனம்பாற்—பற்றிய பவங்கடீர்ப்பான் பரமனுமிவைகள் செய்தான்." எனப் பிரமதேவர் தேவர்களுக்கு அருளிச்செய்ததையும் வெளிப்பட்டுச் சிவபிரானுடைய வாக்கின். சத்தியின்பெருமையும் அருளும் வெளிப்பட்டன.

## சனிபிடித் தலைத்ததெனல்.

ஆதித்தன் முதலிய ஒன்பது கிரகங்களும் மேடம் முதலிய பன்னிரண்டு இராசிகளையுங் கூடிநிற்கும் நிலைமுதலிய வற்றினால் தனித் தனியே ஆன்மாக்களுடைய கன்மத்துக் கீடான சுகதுக்க அநுபவங்களை அறிதலியலுதலினால், கிரகங்கள் அவற்றை யுலகத்திற் கறிவிக்கும் சிவசத்தி பதிந்த கருவியாயும், அந்தச் சம்பந்தத்தினால் கருத்தாவாகவும் இருக்கின்றன. அக்கிரகங்களுக்குச் செய்யும் வழிபாட்டை அக்கிரகங்களுக்கு அதிதேவதைகளாகிய தமது சத்திபதிந்த தேவதைகள் வாயிலாகச் சிவபிரானே யேற்றுப் பயனளிப்பார். இது இவ்வாறிருக்க, கன்மமல மில்லாத சர்த்தாவாகிய சிவபிரானைச் சனிபிடித் தலைத்ததென்பது உடம்பில்லாதவன் பசியால் வருந்தினான் என்பதுபோலும். இது தற்குறிப்பேற்றமென்னும் அலங்கார இலக்கண மமைத்துச் சனி தோத்திரம் பாடிய வித்துவானைப் பிடித்த சனியன் இந்த மூடக்கிறிஸ்தவ மூதேவிகளைப் பிடித்தலைத் தெழுதுவித்தது.

## விறகுவெட்டிப்பிழைத்தார் எனல்.

இசைத்திறமையினால் பற்பல அரசர்களிடத்தும் விருதபெற்றுப் பாண்டியனுடைய சபைக்கு விருதபெறுதல் குறித்து வந்த ஏமநாதனை இசைவாதிலே தன்னால் வெல்லுத லியலாமையை நினைந்து நாணமுற்றுத் தம்மை வழிபாடுசெய்த தொண்டராகிய பாணபத்திரர் பொருட்டாக, சிவபிரான் விறகுவெட்டி விற்றுச் சீவனஞ் செய்வான் போல ஏமநாதனுக்கு முன்னே வெளிப்பட்டுத் தம்மைப் பாணபத்திரருடைய அடிமையென்று கூறி யாழ்வாசித்துக் காட்டினார். அதனால் ஏமநாதன் தன்னிடத்தே இசைகற்க இயலான் என்று பாணபத்திரனால் கழித்து விடப்பட்டு விறகுவெட்டிப் பிழைக்கும் இம் முதியோனிசை இப்படியாயின் அப்பாணபத்திரனுடைய இசைத்திறம் எப்படியாமோ எனநினைந்து ஆச்சரியமுற்றுத் தான் பிறவிடங்களிலே பெற்ற விருதையெல்லாம் இவ்விடத்தே இழந்துபோவேன் எனநினைந்து பயந்து ஓடினான். இதனாற் சிவபிரான் அடியார்க் கெளியராகுதலும், அடியாரைத் தொண்டுகொள்ளு முறைமையும் வெளிப்பட்டன. இவ்வாறே சிவபிரான் அடியார்க்கருள் புரிதல் காரணமாகக் கொள்ளும் வடிவங்களுஞ் செயல்களும் அளவிறந்தன, இதனால் அவர்பெருமை குறைவுபடார். அருளேயாம் என்பது, "குறித்ததொன்றாகமாட்டாக் குறைவிலனாதலாலும்—நெறிப்பட நிறைந்தஞானத் தொழிலுடைநிலைமையாலும்—வெறுப்பொடுவிருப்புத்தன்பால் மேவுதலிலாமை

யாலும்—நிறுத்திடுநினைந்தமேனி நின்மலனருளினாலே" என்னுஞ் சைவசித்தாந்தச் செய்யுளாலமையும். மேற்காட்டிய ஏதுக்களால் சிவபிரானுடைய முதன்மை முதலிய பதிலக்கணம் குன்றாமையும் அவருடைய அருட்பெருக்கமும் வெளிப்பட்டன.

இனி அழலாடி என்னு நாமம் அழலோடாடியென்னும் பொருளாய் ஆன்மாக்களுக்குப் பாசநாசஞ்செய்து முத்திகொடுக்குங் கர்த்தாவாயிருத்தலையும், அருளுடையரா யிருத்தலையும் வெளிப்படுத்துகின்றது. அது "ஸம்மாரம் அக்நிரூபம் ஸ்யாத் பாசாநாம் பஸ்ம ஸாத்கிருதி" [சம்மாரம் அக்கினிவடிவாகக் காணப்படும். அது பாசங்களைச் சாம்பர் செய்தலாம்] என வாதுளாகமமும் "சாற்றியிடு மங்கியிலே சங்காரம்" எனச் சைவசித்தாந்தநூலுங் கூறுதலாலமையும். ஆதலால் ஆன்மாக்களுக்கு மலபரிபாகம் வரச்செய்து பாசநாசஞ்செய்து முத்திகொடுப்பவரென்பதும் அருளுடையவர் என்பதும் விளங்குகின்றன.

இனிச் சுடலையாடி என்னும் நாமம் சுடலையிலே நடிப்பவர் என்னும்பொருளாய், உயிரும் உயிருக்கிடமாகிய உடலும் அதற்கிடமாகிய உலகமும் முதற் காரணத்திலே ஒடுங்கிய இடத்தே எஞ்சிநிற்பவர் எனப்பொருள் படலால், அவர் சங்கார காரணராயும், அழிவில்லாதவராயும், தொடக்கமில்லா தவராயும், அருளுடையராயும் இருத்தலை வெளிப்படுத்துகின்றது. "கடல்விடநுகர்ந்ததொல்லைக் கடவுள்பின்னழிக்குங்காலை—யுடலுயிருலகம்யாவு மொடுங்கியவிடமதன்றோ—சுடலையதாகுமந்தச் சுடலைகாணனையசோதி—நடநவில்கின்றவெல்லை நாடருந்தகைமைத்தாஃதே" "ஆயகாலையி லச்சுதற்காயுவு—மாயுமெல்லையின் மன்னுயிர்யாவையுந்—தேயுமண்டஞ் சிதைந்திடுமெங்கணும்—பாயிருங்கனலேபரந்துண்ணுமால்" "ஆனகாலை யகிலமுமீமமாய்த்—தூநலங்கொடு தோன்றுமச்சூழலிற்—றானுலாவித் தனிநடஞ்செய்திடு—ஞானநாயக னாயகிகாணவே" எனத்ததீசிமுனிவரும், "பின்னூரமுடிப்பான்றன்னைப் பிரானெனத்தேற்றுந்தன்மை—என்னெனவுரைத்திமைந்த வெங்களைச்சுரரையேனைத்—துன்னியவுயிர்கடம்மைத் தொலைவுசெய்திடுவனீற்றி—லன்னவனென்னின்முன்ன மளித்தவனவனேயன்றோ" எனப்பிரமதேவரும், "முன்னரேயெலாமுடித்தநாதனே—பின்னுமத்திற மளிக்கும்பெற்றியா—னன்னவன்கணே யனைத்துமாகுமா—லின்னபான்மைதா னீசன்வாய்மையே" என உமாதேவியாருங் கூறிய கந்தபுராணச் செய்யுட்களாலமையும். சங்காரகர்த்தாவாய் எல்லாம் அழிந்தகாலத் தெஞ்சிநிற்பவர் எனவே அழிவில்லாதவரும், எல்லாவற்றையும் அழித்தவர் எனவே உண்டாக்குபவரும், எல்லாவற்றையும் அழித்தல் ஆக்கல் செய்பவராகவே ஆதியும் அந்தமும் இல்லாதவருமாயினார்.

இதனாற் சிவபிரான் பிறப்பிறப்பில்லாதவர் என்பது பெறப்பட்டது. கிறிஸ்தவர் "சிவன் சத்திவயிற்றிலும் விட்டுணுவின் வெயர்வையிலும் தாமதகுணத்திலும் தோன்றினன் என்று புராணங்கள் கூறுகின்ற படியால் அவன் அநாதிநித்திய கடவுளல்லவென்று அறியலாம்" என்று எழுதுகிறாரே என்றால், ஒருவன் பலமுறை பிறத்தலை ஒத்துக்கொள்ளாக் கிறிஸ்தவர், சிவன் பல இடங்களிலும் பிறந்தாரென்று ஒத்துக்கொண்டதே வியக்கத்தக்கது. "சிவன் சத்தி வயிற்றில் விட்டுணுவின் வெயர்வையில் பிரமாவின் தொடையில் தாமதகுணத்தில் தோன்றினன்" என்னுங் கிறிஸ்தவர் மானுடர் பிறத்தல் தாய்தந்தையருடைய சுக்கில சுரோணித வழியாய்ச் சந்தான ரூபமாய் உற்பவித்து யோனிவழியாய்ப் பிறத்தலேயாகக் கொள்ளுங் கொள்கையையுடையவர்; ஆகையால் சிவபிரானுடைய குறித்த தோற்றங்களைக் கருப்ப உற்பத்தியாய் யோனிவழியாய்ப் பிறந்த கிறிஸ்து முதலிய மனுடருடைய பிறப்புப்போலக் கொள்ளாமை அவர்க்கே கருத்தாயிற்று.

## சிவன் சத்திவயிற்றில் தோன்றினார் எனல்.

சிவன்சத்திவயிற்றிலே தோன்றலாவது, சிவத்துக்கு அபின்னமாகிய சத்தி அருளாகும். அச்சிவத்திலே தோன்றிய அருளாகிய சத்தியினாலே மனோவாகதீதமாகிய அச்சிவத்துக்குப் பஞ்சகிருத்தியகாரணமாய் உருவம் குணம் செயல் நாமம் என்பன தோன்றும். இதுவே சிவத்தினின்றுஞ் சத்தியுஞ் சத்தியினின்றுஞ் சிவமுந் தோன்றின என்பதின் வெளிப்பொருள். இதனுடைய நுட்பமான விரிந்தபொருளைச் சிவஞானசித்தியாரில்—"சிவஞ் சத்திதன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்றும்" என்னுந் திருவிருத்தத்திற்கு ஞானப்பிரகாசர் முதலிய பெரியோர்கள் செய்த உரைகளானும், திருவாசகத்திலே "இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன் றமையனெம்மையன்" எ—ம். திருக்கோவையாரில் "தன்னொருபாலவளத்தனும் மகனுந்தில்லையான்" எனவும் கூறியவாக்காலும் உரையாலும் அறியலாம்.

## வெயர்வையில் தொடையில் தோன்றினார் எனல்.

படைத்தன் முதலிய அதிகார கிருத்தியங்களைப்பெற்ற பிரமா முதலியோர் தம்மைப் பரமென நினைந்து மயங்கிக் கிருத்தியங்களை மறந்து இழந்தகாலத்து அவர்களைத் தேற்றுதல் காரணமாகச் சிவகலைகள் அவர்களிடத்தே தோற்றி அவர்களுடைய மயக்கத்தைமாற்றும்.

அது படைத்தல் முதலிய அதிகார கிருத்தியத்தைப் பெற்ற பிரமாமுதலியோர் எங்களுக்கு இப்பரம் எக்காலத்து நீங்குமென்று சிவபிரானைக் கேட்க, அவர் உங்களாயுளுள்ள வரையும் இச்செயல்களைச் செய்யுங்கள். உங்களைப் பரம் என்று நினைத்தலால் இச்செயல்கள் முடிவுபெறுது. நீங்கள் விபூதியையணிந்து பஞ்சாக்கரத்தைச் சிந்தியுங்கள். இதனால் உங்கள் கிரியைகள் முற்றுப்பெறும். மயக்கமடைவீரேல் நமதுகலைகள் உம்மிடத்தேவந்து தோன்றி உங்களைத் தெளிவித்து நன்மையை யடையப்பண்ணுமென் றருளிச்செய்தமை கந்தபுராணத்தில் ததீசிப்படலத்தில், "ஆயுண் மற்றுமக் கெத்துணை யத்துணையளவு—நீவிரிச்செயல் புரிமின்கள் பரமெனநினைந்தீர்—தூயவித்தையா நீறுளதாக்கியேதொழுது—காயமேற்புனைந் தைஞ்செழுத்துன்னுதிர் கடிதின்" எ—ம். "தன்மையிங்கிவை புரிதிரேலித்தொழிநரிக்கும்—வன்மையெய்துவிரன்றி நங்கலைசணுமருங்கு—தொன்மையுள்ளன காட்டிநின்றருளுமாற்றெலைவி—னன்மையெய்துவீ ரென்றருள் செய்தனனம்பன்" எ—ம் கூறியசெய்யுட்களாலும், அவ்வாறு சிவகலைகள் அவர்களிடத்தே தோன்றல், கந்தபுராணம் உருத்திரகேள்விப்படலத்திலும் பிறவிடத்திலுஞ் சொல்லுதலாலும், இன்னும் "மட்டறுமலர்மசன் செருக்கடங்கிட மயங்கியவிதிதேற்ற நிட்டையாலவ னெற்றியிற்றோன்றிய நீலலோகிதநாதர்" எனத் திருவிளையாடற் புராணத்திற் கூறுதலாலும் அமையும்.

இவ்வாறு சிவகலைகளாகிய உருத்திரர் அவர்களிடத்துத் தோன்றுதல் அவர்களுக் கருள்செய்தல் காரணமாதலால் சிவபிரானுடைய பரத்துவமும் அருளுடைமையுந் தோன்றின. அவர்வடிவங் கொள்ளுதல் அருளாதல் "அல்வேறுபடுக்குமுழுச்சுடர்போ லடராணவநீக்கருளைந்தொழில்கட்—கொல்வேறுருவம் பலகொண்டருளு முவையன்றியுமெண்ணிலுயிர்த்தொகையும்—பல்வேறியல்புள்ளனவேயதனுற் பயிலும்பரிபாகமதற்கியையச்—சொல்வேறுருவுந்தொழிலும்பெயருந் தொலையாவருளெந்தைதொடங்கினனே" என்று கந்தசுவாமி நாரதமுனிவருக் கருளிச்செய்த திருவாக்கானும் உணரப்படும்.

## தாமதகுணத்தில்தோன்றினுரெனல்.

நிருமலமாய் ஞானசொரூபமாயிருக்கும் சிவபிரான், உருவம் குணம் முதலியன ஒன்றும் இல்லாதவராயிருந்தும் ஆன்மாக்கள்பொருட்டாகப் படைத்தன்முதலிய கிரியைகளைப் பிரமாமுதலியோரை அதிட்டித்து நின்று நடத்துதலால் உருவம், குணம் முதலியவற்றை உடையவராக உபசரிக்கப்படுவார்.

பிரமவிட்டுணுக்களை அதிட்டித்து நின்று படைத்தல் காத்தல் போலவே காலஉருத்திரரை அதிட்டித்துநின்று எல்லாவற்றையுஞ் சங்கரிப்பார். சங்காரகிருத்தியம் கோபத்துடனே முடிவுபெறவேண்டுமாகையால் தாம் நிர்க்குணராயிருந்துந் தமோகுணமுடையவர் என்றுஞ் சொல்லப்பட்டார். அவர் மும்மூர்த்திகளையும் அதிட்டித்து நின்று கிருத்திய கர்த்தாவாயிருத்தல்பற்றியே முக்குணங்களும் சூலவடிவாய் அவர் திருக்கரத்திருக்கின்றன என ஆகமங்கள் கூறும்.

“நிர்க்குணத்தனே நிமலனன்னவன்–சிற்குணத்தனுய்த் திகழுவானெரு–சொற்குணத்தனே தொலைக்குநாளடு–மூர்குணத்தினை மூன்னுமாறலால்” எ–ம் “துன்றுதொல்லுயிர்தொலைவுசெய்திடு–மன்றுதாமதத்வதன்றியே—நன்றுநன்றது ஞானநாயகற்–கென்றுமுள்ளதோ ரியற்கையாகுமோ” எ—ம் கந்தபுராணங் கூறுதலால் சங்காரத்தொழில் காரணமாகத் தமோகுணமுடையவராய் விளங்கினரென்று சொல்லப்பட்டாரன்றிக் குணவசத்தராய்த் தமோகுணத்திற்குரிய செயல்களையுடையரல்ல ரென்பதும் ஈண்டுப்பெறப்பட்டது. இதன்றிறம் இன்னும் விரிப்பிற் பெருகும்.

மேற்கூறியபிரகாரம் எல்லாரையும் அழித்தலும் அருளாமோ எனின் தனுகரணாதிகளுடனே சம்பந்தப்பட்டுப் புவனங்களிலே போதல் வருதல் முதற்றொழில்களால் ஆன்மாக்களுக்கு வரும் இளைப்பு நீக்கலால் அருளேயாம். அது, “அழிப்பிளைப்பாற்றல்” என்னுஞ் சைவசித்தாந்திகளுடையவாக்கானும், “தீயதன்றடுஞ் செயலுநல்லரு–ளாயிலாவிக ளழிந்துந்தோன்றியு–மோவிலாதுழன் றலைவுறுபலே–மாய்வுசெய்திறை வருத்தமாற்றலால்” என உமாதேவியாரும், “படர்மதிமிலைச்சுஞ்சென்னிப் பண்ணவனுயிர்களெல்லா–மடுவதும்வருத்தந்தீர்க்கு மாரருளானவாபோல்” எனப் பிரமதேவருங் கூறிய கருத்தையுடைய கந்தபுராணச்செய்யுளாலும் அருளென்றே தெளியப்படும்.

நால்வகை யோனிகளுள் ஒரு யோனிவாய்ப்பட்டுப் பிறந்திறப்பவை யாவை அவையெல்லாம் ஆன்மாக்கள்; அப்படிப் பிறத்த லிறத்தல் இல்லாதது யாது அது பதிப்பொருள். இதுவொன்றே அவ்விரண்டிற்கு முள்ளவேறுபாட்டை எளிதினுணரும் வண்ணம் நிற்பது. ஆதலால், வேதம் புர்ாணம் இதிகாசம் முதலிய நூல்களிலே மற்றைத்தேவர்களெல்லாம் பிறந்திறத்தல் சொல்லப்படுதலாலும், அது சிவபிரானுக் குண்டென்பது எங்காயினுஞ் சொல்லப்படாமையாலும் அநாதிமுத்த சித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்பது தெள்ளிதிற் றுணியப்படும். அது “யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே–மாதொருபாகனுர்தாம் வருவர்மற்றத்தெய்வங்

செய்யு-மாதலாலவை
கள்—வேதனைப்படுமிறக்கும்பிறக்குமேல்வினையுஞ்செய்யு-மாதலாலவை
யிலாதா னறிந்தருள்செய்வனன்றே" எனச் சிவஞானசித்தியாரிலும்
"எல்லார்பிறப்புமிறப்பு மியற்பாவலர்தஞ்—சொல்லாற்றெளிந்தோஞ்
சோணேச—ரில்லிற்—பிறந்தகதையுங்கேளேம் பேருலகில்வாழ்ந்தண்—
டிறந்தகதையுங்கேட்டிலேம்" என அருணகிரியந்தாதியிலும் பெரியோர்
கள் கூறிய வாக்காலமையும். ஆதலால் அவர் பிறப்பிலி இறப்பிலி
என்று கூறிய சுருதிப்பிரமாணங் காட்டல் மிகையாம். அதுவே வே
தாகமாதி சமஸ்தகலைகளிலும் கூறப்பட்டு வெள்ளிடைமலைபோற் கிட
க்கின்றது. பின்னர் அவருடைய இறப்பை எங்குந்தேடித் தடவிக்
கண்டுபிடித்த கிறிஸ்தவருக்குக் கிடைத்த சுருதி "ஒருபாதிமால்கொள
மற்றொருபாதியுமை யவள்கொண் டருபாதியாலு மிறந்தான்புராரி"
என்னும் தனிப்பாட்டே ஆதலால் சிவபிரானுக்கு இறப்புச் சொன்
ன சுருதி வேறு பிறிதில்லையென்பது நிச்சயமாய்ச் சாதிக்கப்பட்டது.
வாயிற் காவலாளராற் றடுக்கப்பட்டுப் போசராசாவின் மாளிகையினு
ள்ளே பிரவேசிக்கப் பெறாத ஒரு வித்துவான் இழவுசொல்லி வந்
தேன் என்று தடை நீங்கி உட்பிரவேசித்துத் தான் முன்சொல்லிவந்
ததற் கிசைய இழவுசொல்லுவானாய் ஒருசெய்யுள் தொடங்கி "ஒரு
பாதிமால்கொள மற்றொருபாதியுமையவள்கொண்— டருபாதியாலுமிறந்
தான்புராரியிருநதியோ— பெருவாரிதியிற்பிறைவானிற் சர்ப்பம்பிலத்திற்
கற்ப-தருவானபோசகொடையுன்கையோடென்கைதந்தனவே" என்
னும் பாட்டில் சிவபிரானுக்கு வடிவம் சத்திகாரிய மாதலும், சத்தி ப
லதிறப்படலும் அர்த்தநாரீசுரவடிவாதலும் சத்தி அருளாதலும் அரு
ளாகிய சத்தியோடியையாதவழி மனோவாக நிதமாய் நிற்றலும் அவ
ரிடத்திருக்கும் சந்திரகலை முதலியன ஒவ்வோர் ஆபத்துக் காலங்களி
லே அவர்களை இரக்ஷித்தமுறையாதலை விளக்கி அவரிடத்திருக்கு முறை
மையும் வெளிப்படத் தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரமமைத்து
நல்வினையினாலே ஈகையை உன்னிடத்தும் தீவினையினால் ஏற்றலை
யென்னிடத்தும் நியமித்தார் என்று பாடி முடித்தான். அரசன் அவ
னைத் தன் சிங்காசனத்தி லொருங்கிருத்திக்கொண்டுபசரித்தான் என்
பர். இச்செய்யுளின் பொருளைப் பாலமாணாக்கர்தாமும் கல்வியறிவில்
லாதபெண்கள்தாமும் உணருவார்கள். இதனை அறிந்துகொள்ள மாட்
டாமையால் கிறிஸ்தவப் பாமரர்களுடைய அறிவின்தன்மையும் அவர்
கள் பதி பசு பாச லக்ஷணம் உணரவல்ல ரல்லரென்பதும் ஆராயத்
தானுந் தக்கவரல்லர் என்பதும் வெளிப்பட்டன.

சடசித்துக்களின் இலக்கணந் தெரியாதவர்களாய் ஆன்மா ஆதி
மனுஷருடைய சந்தான ரூபமாகப் படைக்கப்பட்டுப் பிரவாகிக்கின்ற
தாகக் கொண்டு உடம்புக்குப்போல உயிருக்கும் முதற்காரண மிரு

க்கவேண்டிய ஏற்பாட்டையும், சரீரம் பின்னரும் உயிர்த்தெழும்பும் என்னுங் கொள்கையையு முடையராய்ச் சரீரத்தையே ஆன்மாவாக எண்ணும் அற்ப அறிவினர் செய்த விவிலிய நூலுணர்ச்சியை மாத்திரமுடைய கிறிஸ்தவர், கம்மியருடைய அக்கசாலையிலே விக்கிரகங்களுண்டாக்கப் படுதலையும் அழிக்கப்படுதலையும் காண்பினும் சிவன் பிறந்தான் இறந்தான் என்பர். இதுவன்றி எந்தவூரிலாவது எந்தச் சாதியிலாவது யாவரேனும் பரமசிவன் சதாசிவன் முதலிய பெயருடையர்களா யிருந்து இறந்துபோதலைக் கண்டாலும் கேட்டாலும் இன்ன ஊரிலே சிவன் பிறந்திருந்தார் இறந்தாரென்று வயதுஞ் சொல்வார்கள்; நக்ஷத்திரபலன் முதலியனவுஞ் சொல்லுவார்கள். அத்துணை விவேக சூனியர் வாக்குக்கு யாது உத்தரஞ் சொல்லலாம். ஆதித்தனை இருளென்னும் பிறவிக்குருடனுக்கு ஒளியுள்ள பொருளென்று பிரத்தியக்ஷத்திற் காட்டுவாருண்டா.

இனி நக்கன் என்னும் திருநாமம் ஆடையுடாதவர் எனப்பொருள்பட்டு அவர் ஏகத்துவ முடையராயிருத்தலை வெளிப்படுத்தித் தம்மிற் பிறிதாய்த் தம்மைச் சூழுவதொன் றில்லாதவர், ஒன்றாலும் பற்றப்படாதவர், அநாதிமலமுத்தர், முத்தியைக்கொடுப்பவர் எனப் பொருள்படும். ஆதலால் இந்நாமம் அவருடைய பெருமையையே குறித்தது. சகளத்திருமேனியின் இலக்கணத்தைக் குறித்ததாய் நிருவாணகோலத்தைக் குறித்ததன்று. அது "புலித்தோலை யுடுத்திக்கொண்டார் யானைத்தோலைப் போர்த்துக்கொண்டார் என்று" சொல்லியிருக்கிறதாகக் கிறிஸ்தவர்களே சொல்லுகிறார்கள் அதனாலமையும்.

"சிவன் பூமியுடனே விட்டுணுவால் விழுங்கப்பட்டார் அதனால் பற்றப்பட்டாரே" என்று கிறிஸ்தவர் எழுதுகிறார்களே என்றால், இங்கே அவர் தியானத்திலமைதலே பொருளாம்; அதுவன்றி விட்டுணுபரங் கூறுகின்ற பாகவதநூல் விட்டுணுபரஞ் சாதித்துப் பூமியுடனே சிவனும் விழுங்கப்பட்டார் எனச் சொல்லியிருப்பினும், மார்க்கண்டேய முனிவர் விழுங்கப்படாதிருந்து சிவனையே பரமென்று பூசிக்கத்தேடி விட்டுணுவின் வாய்வழியாய்ச் சென்று பூசித்தார் என்று கூறுதலால் சிவபரமே சாதிக்கின்றது.

இனி நந்தி என்னுந் திருநாமத்திற்கு ஆனந்த முடையவர் ஆனந்தத்தைக்கொடுப்பவர் என்பன பொருளாதலால் இந்நாமம் முன்னர்ப் பரமானந்த ரூபியென்றதனாற் கொள்ளப்பட்ட பொருள்களெல்லாங் கொள்ளப்பட்டுச் சிவபிரானுடைய பெருமையையே காட்டும்.

இனி நீறணிந்தோன் என்னுந் திருநாமம் விபூதியணிந்தவர் எனப் பொருள்பட்டு அவருடைய அருளின் பெருமையை விளக்குகின்றது. நீறணிதல் மூன்றுமொரு பிரகாரம் சொல்லப்பட்டது. விபூதியாவது

பசுமல் நீக்கத்துச் சிவத்துவக்குறியாய் விளங்கிச் சிவமந்திரங்கொண்டு தகிக்கப்படலால் சிவசத்தி பதியப்பெற்று, ஆன்மாக்களுடைய ஆணவமலத்தை நீக்கும் மருந்தாய் "நீறுபுனைவார்வினையை நீறுசெய்தலாலே—வீறுதனிநாமமது நீறெனவிளம்பும்" எனப்பட்டுத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் "மந்திரமாவதுநீறு" என்பன முதலாகப் பெருமை கூறப்பட்டும், "மாலோடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு" என அந்நாயனாராலே பெருமைசொல்லுதற் கரியதென்று கூறப்படலால், "மூலமீறிலாமுழுமுதற் பரமனைமுடிவில்—காலமோரினும் புலப்படானுங்கதுகடுப்ப—நாலுவேதமுமுணர்ந்தவர் நாற்பொருளளிக்கும்—பால்வெண்ணீற்றிய வளப்பரிதாமெனப்பகர்வார்." என உபதேசகாண்டத்திற் கூறியபிரகாரம் அதன் பெருமை அறியவும் சொல்லவும் முற்றப்பெறாத இயல்பினதாம். ஆதலால் விபூதியை யணியும் ஆன்மாக்கள் சிவபெருமானுடைய பெருமையையும், ஆன்மாவாகிய தம்முடைய சிறுமையையும், விபூதி சிவசின்னமாய் முத்திசாதன மாதலையும், அவருடைய அருளுடைமையும் நினைதற்கும், அதனை அணிந்திருக்கக்கண்டபிறரும் அவ்வாறு நினைந்து சிவபத்தி அடியார்பத்தி அடைதற்கும் ஏதுவாய் யாவரும் அணிந்து கொள்ளுதற் கேதுவாகச் சிவபிரான் சகளத்திருமேனி யுடையராயபோது நீறணிந்தவராகக் காணப்படுவார்.

தாம் அதனை அணிதலால் அதனைக்கண்ட கேட்ட ஆன்மாக்கள் அவ்வாறதனைத் தரிக்க அது புத்தி முத்திகளுக் கேதுவாய்த் தந்தை தாயர் பிள்ளைகளுக்கு நற்செய்கைகளைத் தாமேசெய்து காட்டிப் பயிற்றல் போலிருத்தலால், நீறணிதல் அருளுடைமையேயாம். இதனாற் சிவபிரானுடைய அருளின்பெருமையே விளங்கிற்று.

இனிப் பித்தன் என்னுந் திருநாமம், தம்முடைய மெய்யன்பர்கள் செய்தன சொல்லியனவெல்லாம் தமக்கு உவப்பாதலையும் விருப்பு வெறுப்பின்மையையும் அருளுடைமையையும் விளக்குகின்றது. அது சுந்தரமூர்த்திநாயனார் என்னும்மெய்யன்பர், கிழப்பிராமண வடிவங்கொண்டு தம்மை ஆட்கொள்ள வந்த சிவபிரானைச் சிவபிரானென உணராது "நீபித்தனோ" என்றுகூறிப் பின்னர்ச் சிவபிரானென் உணர்ந்து, "தேவரீருடைய அளவிறந்த பெருமையில் எதை அறிந்துபாடுவேன்" என்ன "நீநம்மை முன்னர்ப் பித்தன் என்றபடியே பித்தனென்றேபாடு" என அருளிச்செய்தமையாலும், பித்தத்தையுடையான் பித்தின்வழியே வசப்படுதல்போலவும் கோபத்தை யுடையான் கோபத்தின் வசமாதல்போலவும் சிவபிரான் அருளுடைமையால் அருள் வசப்பட்டு நின்று ஆன்மாக்களுக்கு வேண்டியவாறுதவி அன்பரான ஆன்மாக்கள் செய்தன சொல்லியன வெல்லாம் தாம் உவப்பாகக் கொள்ளு

முறைபற்றிக் கந்தசுவாமி, அவரை "அருளின்பித் தேறிகின்ற முனே வன்" என அகத்திய முனிவருக் கருளிச்செய்தமையாலும், அருளு டைமையே பித்தென்பது போதரும். இதனாலும் அவருடைய அரு ளுடைமையே விளங்கிற்று.

இனிப் பேயோடாடி என்னுந் திருநாமம், அடியார்க்கெளியரா தலையும் மெய்யன்பராற் சேவிக்கப்படுதலையும் விளக்குகின்றன. அது, தான் என்று அபிமானிக்கப்படும் உடம்பின் அழகையும் அவ்வுடம் புக்கு வேண்டியனவற்றையும் விரும்பாமையால் 'அகப்பற்றுப் புறப் பற்றை நீங்கிச் சிவன்முத்தர்களாய்த் "தம்மையுந்துறந்தே தலைநின் றவர்" என்றபடி பேய்வடிவத்தை வேண்டிப் பெற்றுத் தம்மைச் சூழ்ந்து சேவிக்கும் பிரமதகணங்களுடனே நின்று அவர்களுக்கெளி யராய் ஆனந்தநடனஞ் செய்தருளுவார் ஆகையால் அருளுடைமையே வெளிப்பட்டது. மெய்யன்பர் பேய்வடிவத்தை விரும்புதல்சிவ பத்தியிற் சிறந்த காரைக்காலம்மையார் "தாங்கியவனப்புநின்ற தசைப்பொதி கழித்திங்குன்பா—லாங்குகின்றார்கள்போற்றும்பேய்வடிவடியேனுக்குப்- பாங்குறவேண்டுமென்றுபரமனைப்பரவிநின்றார்" எனவும் "ஆனவப்பொ ழுதுமன்றுளாடுவாரருளினாலே— மேனெறியுணர்வுகூரவேண்டிற்றேபெ றுவார்மெய்யி— லூனுடைவனப்பையெல்லாமுதறியெற்புடம்பேயாகி— வானமுமண்ணுமெல்லாம்வணங்குபேய்வடிவமானார்" எனவும் பெரிய புராணத்துக் கூறியிருத்தலாலுமறிக.

மேற்காட்டிய நாமங்களால் சிவபிரானுடைய பதிலக்ஷணங் குன் றாமையும், பரத்துவமும் அருளுடைமையுந் தோன்றுதலுங் காண்க.

இன்னும் "சிவன் தாமதகுணத்தால் விஷத்தை உண்டார் எரு தைவாகனமாகக்கொண்டார்" என்றும் "சூதாடினார் பொய்சொன் னார் என்பனமுதலிய இழிதொழிலுடையர்" என்றும் கிறிஸ்தவர் எழுதுகின்றார்களே என்றால் தேவர்களும் அசுரர்களும் நெடுங்காலம் அழிவின்றியிருத்தலை விரும்பி அமிர்தத்தைப் பெற்றுண்ணும்பொரு ட்டு விட்டுணுவை முன்னிட்டுத் திருப்பாற்கடலைக்கடைய அது அவர் களுக்கு உடனே மரணத்தை வருவிக்கும் ஆலாகல விஷத்தைச்சக் கியது. அவர்கள் அவ்விஷத்துக்கு முன்னிற்றலாற்றாராய்ச், சிறுவர் தங்களுக்கு ஆபத்துச் சம்பவிக்குங்காலத்துத் தந்தையாரிடத்துச் செல் லுதல்போலத், தங்களுக்கு முதல்வரென்றறியப்பட்ட சிவபிரான் ஸ்ரீ கண்டசரீரியாய் எழுந்தருளிய திருக்கைலாயமே புகலிடமென்றடைந்து முறையிடச், சிவபிரான் அவ்விஷத்தைத் தம்முடைய திருவருளைமுன் னிட்ட ஒரு அடியவரைக்கொண்டு பிடிப்பித்துத் திருவமுதுசெய்து தாம் எக்காலத்தும் அடியார்க்கு வரும் ஆபத்தை நீக்கிக் காக்கும் முறைமைக்குச் சான்றாய் விளங்க அதனைக் கண்டத்திலே அணியா கத் தரித்துக்கொண்டார்.

எல்லாம் அழியும் மகாசங்காரகாலத்துத் தானழியாமையை விரும்பி இடபவடிவாய்த் தம்மைவந்தடைந்த தருமதேவதையைத் தருமமழியாமையின்பொருட்டுத் தாம்வாகனமாகக்கொண்டார். இவ்விரண்டு செயலும் தமோகுணநிக்கத்துடனே எல்லாவற்றையு மழித்துத் தாமழியாது நிற்கும் சங்காரகர்த்தாவுக்கே இயைந்தனவாயின். இச்செயல்களால் அவர் நித்தியராதலும், அவருடைய திருவருளை முன்னிடாதோர் வேண்டியதெய்தாமையும், திருவருளைமுன்னிட்டோர் வேண்டியதெய்தலும், ஆபத்துக்காலத்துக் காத்தலும், அருளுடையராதலும் வெளிப்பட்டன.

சூதாடினார் பொய்சொன்னார் எனல்.

ஆன்மாக்களுக்கு முத்தி சித்தித்தலேதுவாகச் செய்யப்படும் பஞ்சகிருத்தியம், நிமித்தகாரணமாகிய சிவத்தாலும் அதனுடைய அருளாகிய துணைக்காரணமாகுஞ் சத்தியினாலும் நிகழ்தலே சூதாட்டமென் றுருவகப்படுத்திச் சொல்லப்பட்டது. அப்பஞ்சகிருத்திய நிகழ்ச்சி சத்தியாகிய அருளால் நடைபெறுதலின் சத்திவென்றது என்றும் அச்சத்தி அபின்னமாய்ச் சிவத்திலே அடங்குதலிற் சிவன் வென்றார் என்றும சொல்லலாயிற்று. இது தாய் புத்திரனுக்குத் தந்தையைக் காட்ட அவனறிந்து தந்தையைப் பற்றுவான்; அதுபோலச் சத்தி ஆன்மாவுக்குச் சிவத்தைக் காட்டிச்சேர்க்க அது சிவத்தை அணைந் தின்பமனுபவிக்கும் என்பதாற் கொள்ளப்படும். இதனுடைய நுட்பமான பொருள் விரிப்பிற்பெருகும்.

இவற்றிற்கும் "சிவனுந்தேவனு" என்னும் அத்துண்டுப்புத்தகத்தில் கிறிஸ்தவர் எழுதிய பிறவற்றிற்கும் கிறிஸ்துமதகானன குடாரியினால் "சிவனுந் தேவனுஎன்னுந் தீயநாவுக்கு ஆப்பு" என்னும் புத்தகத்தில் விடை எழுதப்பட்டமையால், இந்துமதம் என ஒருமதமும் இந்துமத நூலென ஒருநூலும் இல்லையாகவும் இந்தியாவிலே பற்பலசமயங்கள் அனுசரிக்கப்படலால் இந்தியாவிலே வழங்குகிற அல்லது இந்தியர் அனுசரிக்கிறமதம் இந்துமதம் என்று அதுகொண்டு சைவத்தை இந்துமதமெனக்கொள்ளுதல் கூடாதாகவும், சிவபிரானுக்குப் பதித்துவஞ்சாதித்துச் சொன்னநூல் வேதசிவாகமங்களாயிருக்கவும், அவர்கள் சைவசமய நூல்கள் இவை என்று தானும் உணராதவர்களாய் "இந்துமத நூல்களைக்கொண்டே சிவனுந்தேவனு அல்லவா என்று தீர்மானிப்போ" மெனத்தொடங்கிச் சைவபுராணங்களிலே யில்லாததாய்ப் புறச்சமயிகள் கற்பித்த கட்டுக்கதைகளை ஆதாரமாகக் கொண்டெழுதிய ஆக்ஷேபங்கள் சமாதான மெழுதவேண்டாதன என்று இவ்வளவில் விடுகின்றோம்.

திருச்சிற்றம்பலம்.

# அநுபந்தம்.

கிறிஸ்தவர் இழிவான பெயர்களென்று தாம் எடுத்துக்காட்டிய அரவணிந்தோன் முதலிய நாமங்களோடு சங்கரன் இறையோன் முதலிய நாமங்களும் அச் சிவநாமங்களாய் நிகண்டிற்றானே இருத்தலையும், இன்னும் அநந்தம் உள்ளன என்று இந் நிகண்டுபாடிய மண்டலபுருடன் தன் கூற்றாகக் கூறியிருத்தலையும், காண அவரிடத்துள்ள தடை கண்மயக்கோ ஆராயத்தக்க அறிவின்மையோ ஆராய்ந்தும் வெளிப்படுத்தாதது நடுவுநிலையின்மையோ அறியோம்.

இன்னும் "தற்பரன் அதிதன் பூரணன் அமலன் நித்தியன் ஏகன் என்ற மகிமையான நாமங்கள் தேவன் ஒருவருக்கேயன்றி மற்றொருவருக்கும் வழங்கத்தக்கவைகளல்ல" என்று உபாயமாய் எழுதுகிறார்; அவை தேவனுக்குரிய பெயர் என்று சொல்ல எழுத அவர்க்கு நாவும் கையும் எழவில்லை.

இதனால், மேற்காட்டிய தற்பரன் முதலிய நாமங்களில் ஒருநாமமேனும் அவர் கடவுளாகிய கிறிஸ்துவுக்கு இட்டுவழங்காமையையும், இட்டுவழங்கத்தக்க காரணம் அவர்க்கின்மையையும், அவர்களே காட்டுகிறார்கள். இந் நாமங்களைக் கிறிஸ்துவுக்கு இட்டு வழங்கலாமாயின், விவிலியநூலின் எந்தப் பகுதியிலாவது அவர்க்கு வழங்கியிருக்கின்றனவா? இந்தப் பெயர்ப்பொருளைத் தரக் கூடிய சொற்கள்தானும் விவிலியநூலில் உள்ளனவா? இல்லை. பின்னர், காரியங்களால் இந்த இலக்கணங்கள் கிறிஸ்துவுக்கு இருத்தலால் இந்நாமங்களை அவர்க்கிட்டு வழங்கலாம் என்பர்போலும். அப்படியாயின், தேவனுக்குரிய இலக்கணங்கள் இவை என்று விவிலியநூலிற் கூறியதுண்டா? தங்கள் நூலிலில்லாததைக் கூறி இடுதல், இரவல் வாங்கி இட்டு எடுத்துக் கொள்ளுகிற செயல்போலும். அப்படிக் காரணங்களால் பெயரிடுகில் அவர்க்குவழங்கிய இம்மானுவேல், யேசு, கிறிஸ்து, ரபீ, மேய்ப்பான் என்னும் பெயர்களுடனே முள்முடிதரித்தோன், துப்பல்பட்டோன், காடிகுடித்தோன், வாரடிபட்டோன் முதலிய நாமங்களை அவர்க்கிட்டு வழங்கலாம் போலும். அவைகள் அவர்க்கு விருப்பமில்லாதசெயலால் வந்தன ஆதலால் அவர்க்கிட்டு வழங்கலாகா தென்பராயின், கழுதையேறிச்செல்லல், ஓடாவிவேலைசெய்தல், உவயின் ரச

மூண்டாக்கல், மீன்விருத்தியாக்கல், மீன் அகப்படுத்தல் முதலியகாரண ங்களால் கழுதைவாகனன், ஓடாவி முதலிய நாமங்களை அவர்க்கு இட்டு வழங்கலாமே. இனி யேகோவாவைத் தோட்டம் வைத்திருந்தமையால் தோட்டக்காரன் என்றும், காயீன் காணிக்கையாகக் கொடுத்த பழங் களை வெறுத்து ஆபேல் கொடுத்த தலையீற்று ஆட்டுமாமிசத்தை விரு ம்பியபடியாலும் மாமிசபலியே ஏற்று வந்தபடியாலும் இலிங்காக் கிரசரும பலியை விரும்பியபடியாலும் மாமிசப்பிரியன் பிரசாபதிப்பிரி யன் என்றும், அவரே நான் ஒரு எரிச்சலுள்ள தேவன் என்று சொல் லிக்கொண்ட படியால் எரிச்சலன் என்றும், இவ்வாருன செயல் காரண மாகவரும் பெயர்களால் வழங்கலாமே. இதுநிற்க.

கிறிஸ்தவர் அச்சிட்ட அத்துண்டுப் புத்தகத்தில் அவர்கள்எழுதிய போலி நியாயங்கள் அவர்கருத்துக்கும் விட்டுணு பரஞ்சாதிக்குமேயன் றிக் கிறிஸ்து பரஞ் சாதிக்கமாட்டா. அங்ஙனமாகவும், ஆரோ "தமது குமாரனுகிய ஏசுவைத் தந்தார்" என்றும் "இவர்மனுஷனுய்ப்பிறந்து பரி சுத்தராய் நடந்து பாவ பலியாயினர்" என்றும் "இவரே நமக்கு மெய் யானதேவன்" என்றும் எழுதுகிருர். கிறிஸ்தவர் பாகவதநூற்பிரமாணங் கொண்டு விட்டுணு பரஞ்சாதித்துச் சிவனைப் பிறப்பித்துப் பிக்ஷையெடு ப்பித்து அலைவித்துப் பப்பாதியாக்கினது, சைவரையும் வைஷ்ணவரை யும் பிரித்துப் பப்பாதியாக்கவேயாம். இது கிறிஸ்துவின் தந்தரத்தி லும் வெகுதந்தரம். அப்படியன்ருயின் கிறிஸ்துவின் பிறப்பும் இறப்பும் முற்கூறிய சிவனுடைய பிறப்பு இறப்புப்போலத் தோன்றுதல் பாதி பாதியாகுதலாகாது மரியாள் வயிற்றிலே ஆவி புகுந்து சுரோணிதத் தோடு மாத்திரங் கலந்து யோனிவாய்ப்பட்டுப் பிரசவவேதனையோடு பிறந்து சுன்னத்துப் பண்ணப்பட்டுப் பசிதாகமுற்று வருந்தி மரணவேத னைக்குப் பயந்து வேவுகாரராற் பிடிக்கப்பட்டுத் துன்மரணமாக வதைக் கப்பட்டுப் புதைக்கப்பட்ட அவ்வித விசேடத்தால் கிறிஸ்து விசேடப் பட்டார்போலும். அப்படியன்று, மெய்த்தேவனின் இலக்கணமெ ன்று தாம் சொல்லுகிற ஆதியந்த மின்மை, மாருமை, சர்வவல்லமை, சர்வ அறிவு, அளவில்லாத ஞானம், சர்வவியாபகம், சத்தியம், பரிசுத் தம், நீதி, கிருபை என்பவை பத்தும் அவரிடத்திருத்தலால் என்பரா யின்; கிறிஸ்து பிறந்தார் துன்பமுற்ருர் இறந்தார் என்று விவிலிய நூலும் அவர்களுங் கூறுதலால் ஆதி அந்தமுடையராயினர். ஆகவே அவர்கள் "தேவன் ஒருவர்க்கே இட்டுவழங்கலாம்" என மேற்காட்டிய தற்பரன்முதலிய நாமங்களை இட்டு வழங்க அக்கிறிஸ்து தக்கவரல் லர் என்பதும் பெறப்பட்டது. காலத்துக்குக் காலம் விவேக முத லியன இருத்தமுற்றமையாலும், பேதுருவை வியந்து பாராட்டி

உடனே அவனைப் பிசாசு என வைது என்னைவிட்டகலுதி எனக் கூறி மனம் விகாரப்பட்ட படியாலும், ஞான ஸ்நானத்துக்குமுன் ஒருவகையாயும் பின் ஒருவகையாயும் அறிவு விளங்கினபடியாலும், சரீரம்வளர அறிவுவளர்ந்து விகாரப்பட்டபடியாலும், மாறுதலுடையர். யூதர்க்குப் பயந்து ஒளித்துத்திரிந்தமையாலும், தம்மைக் கொல்லவகைதேடிய ஏரோதுக்குப் பயந்து பெற்றபிதாவும் சுமந்தபிதாவும் ஆகிய இருவருடனும் ஊர்விட்டு வேற்றாருக்குப்போய் அலைந்துதிரிந்தமையாலும், தாம் பூமியிலே பிறத்தற்கேதுவான காரணத்தை முழுதாய் முற்றுவியாமையாலும், பிறவாற்றாலும் சர்வவல்லமையிலர். ஆவி அறிவிக்க அறிந்தமையாலும், தம்மைக் காட்டிக்கொடுப்பவனை முன்னர் அறிந்துகொள்ளாமையாலும், அத்திமரத்திற் பழமில்லாமையை அறியாமல் மரத்தடியிற்போய்ப் பார்த்தறிந்தமையாலும், பிறவாற்றாலும் சர்வ அறிவிலர். தாம் அவர்பொருட்டே பாடுபட்டும் அளவில்லாதோரை முத்தி சேர்க்க உபாயம் அறியாமையால் அளவில்லா ஞானமிலர். கண்டித வடிவுடையராய்ப் பூமியிலே பிறந்து திரிந்து இறந்தமையாலும், அப்படி இறந்து தாம் பிறந்தகருமத்தை முற்றுவித்தபின்னரும் கண்டித வுருவம் உடையவராய் உயிர்த்தெழும்பிப் பசிக்கின்றது என்று கேட்டுச் சீடரிடத்தே பொரித்தமீனும் தேன்வதையும் வாங்கிப் புசித்து விலாவிலும் கைகளிலுமுள்ள காயங்களைக்காட்டிப் பின்னரும் யூதர் தம்மைப்பிடித்து வதைப்பரென்றோ மற்றையோருக்கு வெளிப்படாமற் போயினமையாலும், கண்டித உருவமுடையராயினர். கண்டித உருவமுடைமையாலும் எங்கும் வியாபித்திருந்து எல்லாம் அறியும் அறிவு அவர்க்கின்மையாலும், தாம்பட்ட மரணவேதனை மற்றெவர்க்கும் ஒருங்கு நிகழாமையாலும் சர்வவியாபகமிலர். உங்கள் பன்னிருவர்க்குப் பன்னிரு சிங்காசனமென நியமித்துச் சொல்லிப் பின் ஒருவனைவிலக்கி விட்டபடியால் சத்தியமிலர். ஞான ஸ்நானம்பெற்றுப் பரிசுத்த ஆவி இறங்கப்பெற்றபடியால் முன் பரிசுத்தமிலர். தாம் பாடுபட்டதை எல்லார்க்கும் ஒப்ப அறிவியாமையால் சிலர் பயன் அடையவும் பலர் பயன் அடையாதிருக்கவும் செய்து நீதியும் கிருபையும் இலராயினர். பின்னர்க் கிறிஸ்துவின் விசேடம், ஓர் ஊர்தியின் ஒருங்கு பவனிவரும் மணவாள ஒற்றுமை கிறிஸ்துவுக்கிருப்பினும் கழுதையேற்றப்பயிற்சியில் மூதேவியில் குறைந்ததென்றும், சுக்கிலக் கலப்பில்லாமல் உற்பன்னமாய்ப் பிறப்பினும் மீன் அகப்படுத்தும் ஆண்டொழிலில் கரையாரில் விசேடித்தது என்றும் கொள்ளத் தக்கதேயாம்.

இனி மேற்காட்டிய பத்து இலக்கணங்களும் இவர் பிதாவாகிய யேகோவாவிடத் துண்டோவென ஆராய்வோம். ஏசாயா சுஉ அதி எ.

மேற்படி சஅ அதி கக. -ம் வசனங்களின்படி தம்முடைய மகிமை விளங்கவே உலகத்தையும் உயிர்களையும் படைத்தா ரென விவிலிய நூல் கூறுதலால், உலகத்தையும் உயிர்களையும் படைத்தல் தம்பொருட்டாதலும் மகிமைவிளங்குதல் காரணமாதலும் மகிமை முன் விளங்காதிருத்தலும் அதனால் அவர்க்கொரு குறைவிருத்தலும் நிறைவுடைமையிலராதலும் அக்குறையுடைமையால் அதை நீக்கவேண்டுகையால் வியாகுலங் கொண்டிருத்தலும் அதனால் இன்பமிலராதலும் இன்பமடையும்பொருட்டு அதுபற்றிப் படைக்கவிரும்பினர் என்பதும், இன்பஞ்செய்வனவற்றிலே விருப்பும் துன்பஞ்செய்வனவற்றிலே வெறுப்பும் இருத்தலால் அது எதுவாக மோகம் உடையரென்பதும், இக்குறைவுநீக்கும் உபாயவறிவு அநாதியே அறிந்திலராதலின் அநாதி அறிவிலர் என்பதும், அநாதியே கிருத்தியஞ்செய்ய இயலாமையால் அநாதி கர்த்திருத்துவம் இலர் என்பதும், முன்னில்லாதிருந்து சிலகாலத்துக்கு முன்னே கர்த்திருத்துவம் அடைந்து படைக்க முயன்றாராகலின் விகாரமாகிய மாறுபாடுடையர் என்பதும், குறைவுடைமையும் விகாரமும் இருத்தலால் அநாதி நித்திய சர்வ வியாபகத்துவம் இலர் என்பதும், சீவர்களுள்ளே தம்மை நித்தமும் உபசரிக்கத்தக்கவர் இவரென்பதை ஞானத்தால் முன்னர் அறியமாட்டாமையால் அவர்களைப் பாவிகளாக்கிப் பூமியிலே இருத்தி விதிகளைக்கொடுத்துப் பரீக்ஷைசெய்து அறிகின்றார் ஆதலால் சர்வ அறிவிலர் அளவிலா ஞானமிலர் என்பதும், சீவர்க்குப் பாவமும் துக்கமும் விளைவியாதே தம்மை உபசரிப்பித்தலும் தம் மகிமை விளக்கலும் தமக்கின்பம் விளைத்தலுஞ் செய்யமாட்டாமையால் சர்வ வல்லமையிலர் என்பதும், தமதின்பத்தின்பொருட்டுச் சீவர்களைப் படைத்துத் தாமே பாவம் விளைத்தற்கேதுச் செய்து பல சீவர்களை நித்தியகாலந் தண்டிக்கமுயன்றமையால் நீதியும் இரக்கமும் நன்மையும் இலர் என்பதும் பெறப்பட்டன.

இன்னும் யேகோவா உலகத்தையும் சீவர்களையும் படைத்து நன்றென்று கண்டு ஆசீர்வதித்தார். ஆதி க அதி க - உஅ. பின்சபித்தார். ஆதி ௩ அதி கஎ, கஅ. என் ஆவி மனுஷனுடன் என்றைக்கும் போராடுவதில்லை. மனுடனை உண்டாக்கினதினிமித்தம் விசனம் அடைந்தார். மனுஷன்முதல் யாவற்றையும் நிக்கிரகம்பண்ணுவேன் என்றார். ஆதி சூ அதி ௩, ௬, எ. பின் நோவா செலுத்திய மாம்ச பலியினிமித்தம் நீங்கள் பல்கிப் பெருகிப் பூமியிலே திரளாய் வர்த்தித்து விருத்தியாகுங்களென்றார். இனிப் பூமி சலப்பிரளயத்தால் அழிக்கப்படுவதில்லை என்றார். ஆதி கூ அதி எ, கக. இவைபோல்வன பிறவாற்றாலும் மாறுதலுடையர்.

இங்கே மாறுதலாவது நன்றென்று கண்டவரே தீதென்றுசபித்தலும், தீதென்று விசனமடைந்து சலப்பிரளயத்தால் அழித்தவரே பலியால் மனந்திரும்பி ஆசீர்வதித்து மனிதருக்கு மாம்ச உணவையும் கொடுத்து இனிச் சலப்பிரளயத்தால் சங்கரிப்பதில்லை என்றலுமேயாம்.

ஆதி. ௩ அதி ௧௪-ம் வசனம்முதலிய வசனங்களின்படி, அவர், சர்ப்பத்தையும் ஆதாமையும் ஏவாளையும் சபித்ததேயன்றி அச் சர்ப்பத்தின்வழியாய் ஏவாளை அணுப்பிய சாத்தானைச் சபிக்கமுடியாமையாலும், பார்வோனிமித்தமாக அவனுட்டாரை வருத்தினதேயன்றி அவனைக் கொல்ல இயலாமையாலும், ஏரோது ஏசுவைக் குழந்தைப்பருவத்திலே கொல்லவகை தேடியபோது அவனுக்குத் தப்பிக்கொள்ளுதற்காகத் தாமும் தூதரும் சகலன் யோசேப்புமாக ஏசுவைக்கொண்டு அங்குமிங்கும் ஒளித்துத்திரிந்ததேயன்றி அவனை யெதிர்க்க முடியாமையாலும், மலைவாசிகளைத் துரத்தப் புறப்பட்டு அவருள் இருப்புரதமுடையராயிருந்த சிலரைத் துரத்த இயலாமையாலும், பிறவாற்றாலும் சர்வ வல்லமையிலர்.

கர்த்தர் ஆதாமைக்கூப்பிட்டு எங்கேயிருக்கிறாய் என்றார். நீ நிர்வாணியென்று உனக்கு அறிவித்தவன் யார். புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருக்ஷத்தின்கனியைப் புசித்தாயோ என்றார். ஆதி ௩ அதி ௯ - ௧௨. இவ்வாறு கேட்டே அறிந்தபடியாலும் சர்ப்பம் இதைத் தெரிவிக்கும் என முன் அறியாமையாலும், "அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று சோதிப்பேன்" யாத் ௧௬ அதி ௪. "நான் இறங்கிப்போய் என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன்" என்றார். ஆதி. ௧௮ அதி ௨௧. இவற்றில் சோதிப்பேன், போய்ப்பார்த்து அறிவேன் என்றபடியாலும், பிறவாற்றாலும் சர்வ அறிவு அளவில்லாத ஞானம் உடையவரல்லர்.

ஆன்மாக்கள்தோறும் வியாபித்து நின்று அறியும் அறிவும் அவ்வாறுநின்று இயற்றுவிக்கும் வன்மையும் அவர்க்கின்மையானும், "பகலில் குளிர்ச்சியானவேளையில் தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தர்" என்றும், ஆண்வடிவமும் நரைத்தமயிரும் அக்கினிநிறமும் வெள்ளை அங்கியும் கிழப்பருவ வடிவமுமுள்ளவர் என்றும், சொல்லுதலால் கண்டித உருவம் உடையராகக் காணப்பட்டார். வேறு வடிவம் சொல்லப்படாமையால் கண்டிதவுருவுடையர்; ஆகையாலும் சர்வ வியாபகமிலர்.

நீ அதைப்புசிக்கு நாளிலே சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். ஆதி ௨. ௧௭. இதற்குமாருகப் புசித்தவுடனே கண்கள் திறக்கப்பட்டார்கள், சாகவில்லை; பின் சபித்துக்கொன்ருர். சகல மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் ஊர்வனவற்றிற்கும் சகல பசுமையான பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தேன் என்ருர். ஆதி ௧. ௩0. இதற்குமாருகச் சிங்கமுதலிய மிருகாதிகள் தாவர உணவு கொள்ளுதலே இல்லை. இவைபோல்வன பிறவாற்ருனும் அவர் வாக்குத் தவறிற்று: சத்தியமிலர்.

காயீன் ஆபேல் என்னும் இருவரும் சமத்துவமுடையராயிருந்து தங்கள் தங்கள் இடத்துள்ள பொருள்களைக் காணிக்கையாகக் கொடுக்க, அவைகளிற் காயீனுடைய தாவர பதார்த்தங்களை வெறுத்து ஆபேல் இட்ட ஆட்டுக்கடாவை விரும்பி ஏற்றுச் சீவவதைக்கு உடன்பட்டமையாலும், ஆண்குறித்தோலை விரும்பிச் சீவர்களை வருத்தும் விருத்தசேதனத்தை விதித்தமையாலும், பார்வோனுடைய மனதைத் தாமே பலமுறை கடினப்படுத்தி இஸ்ரவேற்சனங்களை அவனைக் கொண்டு தடைப்படுத்திக்கொண்டு அதனுல் அவனுடைய நாட்டிற் சனங்களுக்கும் மிருகங்களுக்கும் உபத்திரவம் உண்டாக்கி அவர்களையும் குழந்தைகளையும் மிருகங்களையும் கொன்று வருத்தினமையாலும், எகிப்தியருடைய பொன்னகைகளை இரவலாகவாங்குவித்துப் பின்கொடாமல் அபகரித்துக் கொள்ளும்படி இஸ்ரவேலரை ஏவிவிட்டபடியாலும், (யாத் ௧௧. ௨, ௩.) எகிப்தியர் உங்களைப் பின்தொடர்ந்து வரும்படி நான் அவர்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்திப் பார்வோனுலும் இரதங்கள் குதிரைவீரர் முதலிய எல்லாராணுவ வீரராலும் மகிமைப்படுவேனென்ருர். (யாத் ௧௪. அதி ௪, ௧௭.) இப்படித்தம்மகிமை விளங்குதற்காக இஸ்ரவேலரைத் தடுக்கவும் பின்ருெடரவும் எகிப்தியரைத்தாமே ஏவிவிட்டுப் பின் அவர்களைக் கொலைபண்ணி விட்டபடியாலும், தம்முடைய சொல் ஏதுவாக எகிப்துதேசத்தை விட்டுத் தம்மைநம்பிவந்த சனங்களை அவர்கள் "நாங்கள் எகிப்திலிருக்கும் போது எகிப்தியருக்கு வேலை செய்யும்படி எங்களைச் சும்மா விட்டுவிடுமென்று சொன்னேமல்லவா" என்றும், "எகிப்திலே பிரேதக் குழிஇல்லை என்ருே வனாந்தரத்திற் சாகும்படி எங்களைக் கொண்டுவந்தீர்" என்றும் சொல்லி அவ்வளவுவருந்தவும் சாகவுந்தக்கதாகச் சமீப வழியைவிட்டு வனாந்தர வழியாகக் கொண்டுபோய் வருத்தியும், எகிப்தியரைப் பின்ருெடரப் பண்ணிக்கொன்றும், இவ்வாறே தம் மகிமை

விளங்குதல் காரணமாகப் பிறசிவர்களை வருத்தினபடியாலும், தமது பிள்ளையாகிய ஏசுவின்காரணமாகப் பெத்லகேமிலும் அதினெல்லைகளி லும் உள்ள இரண்டுவயதுக்கு மேற்படாத ஆண்குழந்தைகளெல்லாங் கொலையுண்ணத் தாமே காரணரானார், இதனாலும், தம்மகிமைவிளங் கத் தமதிச்சையின்படி படைக்கப்பட்ட ஆதாமிலிருந்து தம்முடைய ஆசீர்வாதத்தினால் விருத்திப்பட்டு வருகிற ஆன்மாக்களை, அவர்கள் மிக அற்பமாகிய வாள்நாளிலே தஞ்சுதனை நம்பாத ஏதுவினால், ஒரு காலத்தும் அழியாத நித்திய நரகத்தில் இட்டு வருத்துதலாலும், பிற வாற்றாலும் பரிசுத்தம் கிருபை நீதி என்பவைகளிலராயினார். கர்த்தர் சன்னிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது. எண் ௧௬ அதி ௪௬. எனதுகோபம் இவர்கள்மேல் மூளவும் நான் இவர்களை அழித்துப்போ டவும் என்னை விட்டுவிடு. யாத். ௩௨. ௧0. இதனாலும், "மனுஷன் நன் மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவனைப்போலானானே" "அவன் இன்னும் கையை நீட்டிச் சீவவிருக்ஷத்தின் கனியைப் பறி த்துப் புசித்து என்றைக்கும் உயிரோடிராதபடி செய்யவேண்டும்" என்று வெளியே துரத்திவிட்டார் என்றும், சீவ விருக்ஷத்திற்குப் போகும்வழியைக் காவல்செய்யக் கெருபீன்களைவைத்தார் என்றும், ஆதி ௩ அதி ௨௨, ௨௪. வசனங் கூறுதலால் எல்லாப் பாவத்துக்கும் ஏதுவான கோபமும் பொறாமையும் உடையர் என்பது வெளிப்படை யாகத் தோன்றுகின்றது.

மேற்காட்டிய ஏதுக்களால் சிவபிரானுடைய திருநாமங்கள் அவ ரொருவர்க்கே யுள்ள முற்றறிவு முதலிய பதி இலக்ஷணங்களையே விள க்குவனவாய் அவர் யாவரினும் மேலானவர் என்பது காட்டுதலையும், உற்பத்தி நாசம் உருவம் குணம் செயல் நாமம் ஊர்என்பன இல்லாத அவருடைய உருவம் முதலியன எல்லாம் உற்பத்திநாசம் அடைந்துழ லும் ஆன்மாக்கள் பொருட்டாய் அருளாயிருத்தலையும், கிறிஸ்தவர் "சிவனுந்தேவனா" என்னுந் துண்டுப் புத்தக வழியாய்ச் சிவபிரான் மேலேற்றிய தூஷணங்கள் சிவபிரானை அணுகாதிருத்தலையும், அவர் கள் "தேவன் ஒருவர்க்கே அன்றி மற்றொருவருக்கும் வழங்கத்தக் வைகளல்ல" என்று கூறிய தற்பரன், அதீதன், பூரணன், அமலன், நித்தியன் ஏகன், என்னுநாமங்கள் சிவபிரானுக்கே வழங்கத்தக்கன வாயிருத்தலையும், மெய்த்தேவனின் பத்து லக்ஷணங்களென அவர் கூறும் ஆதியந்த மின்மை, மாறுமை, சர்வவல்லமை, சர்வஅறிவு, அளவில்லாதஞானம், சர்வவியாபகம், சத்தியம், பரிசுத்தம், நீதி, கிரு பை என்பவைகளேயன்றி இவற்றில் அடங்காத விசேடித்த பதி இல

க்ஷணங்களும் சிவபிரானிடத் திருத்தலையும், மேற்குறித்த இலக்கணங்கள் அவர் கடவுளெனக் கத்தும் யெகோவாவிடத்தாவது கிறிஸ்துவிடத்தாவது இல்லாமையையும், இதனால் மேற்குறித்த தற்பரன் முதலிய நாமங்களில் ஒன்றேனும் அவர்களுக் கிட்டு வழங்கக்காரணமில்லாமையையும், அவர்கள் மெய்த்தேவனுக்கு உள்ளன என்று எழுதியவற்றிற் கெதிரிட்ட ஆதியந்தமுடைமை முதலிய குணங்களும், பெருண்டி, மாம்ச விருப்பம், ஒழுக்கவழு, வஞ்சகம், மறதி, பொய், கோபம், காமம், கொலை, தற்புகழ்ச்சி விருப்பம், பொறாமை, மூடத்துவம் முதலியனவுமே யெகோவா கிறிஸ்து என்பவர்களின் சுபாவ இலக்ஷணங்களா யிருத்தலையுங் கண்டு, சிவபெருமான் ஒருவரே பதிலக்ஷணங்களெல்லாம் குறைவற நிறைந்த முழுமுதற் கடவுளென்றும், அவர் அருளிச்செய்த வேத சிவாகமங்களே அதிபரமாப்த வாக்கியமாகிய முதனூல்களென்றும், இவைகளிலே அருளிச்செய்யப்பட்டன நஞ் சிற்றறிவுக்குப் புலப்படாவாயின் குருமுகமாகக் கேட்டறிய வேண்டிய யதார்த்தப் பொருளுடையன வாகுமென்றும் நிச்சயித்துணர்ந்து, அந்நெறியொழுகி, அவரை வழிபட்டு நித்தியானந்தப் பெருவாழ்வாகிய முத்தியின்பத்தைப் பெற்று உய்யக்கடவீர்கள்.

—:*:—

"ஊரிலான்குணங்குறியிலான்செயலிலானுரைக்கும்
பேரிலானொருமுன்னிலான்பின்னிலான்பிறிதோர்
சாரிலான்வரல்போக்கிலான்மேலிலான்றனக்கு
நேரிலானுயிர்க்கடவுளாயென்னுளேநின்றான்."

திருச்சிற்றம்பலம்.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

## இனிப் பதிப்பிக்கப்படும் புத்தகங்கள்.

யெகோவாமனிதனே

கிறிஸ்துமதகுடாரம்

விவிலியசாரசங்கிரகம்

விவிலியபுராதனநிலை

யேசுஇரக்ஷகரல்லர்

யேசுவைவிசுவசித்ததனால் என்னபலன்

மறுபிறப்புநிச்சயம்

இருக்குவேதசிவபரம்.